உ

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

புத்தகம்: 111 இதழ்: 01 - 12 விக்கிரம வருடம்

2000 — 2001

*சைவ பரிபாலன சபை*
*450, காங்கேசன் துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*2001–04–13*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
SRI LANKA

University of Jaffna
141635
Library

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சைவ பரிபாலன சபைவெளியீடு
ஆரம்பம்: விரோதி ஆு ஆவணி மீ 26 ஆம் ஹ
(1889)

பிரதி விலை: 10ரூபா
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

2007
UNIVERSITY OF JAFFNA LIBRARY 2001 PERIODICAL DIVISION
UNIVERSITY OF JAFFNA ARCHIVES

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

சிவமயம்

புத்தகம்: 111

விக்கிரம வருடம் சித்திரைத் திங்கள் 06 ஆம் நாள்
(18-04-2000) சித்திரைப் பூரணை

இதழ்: 01

230-5
HIN
AR

## தமிழ் மக்களுக்கு எதிரான அநாகரிகச் செயல்களைத் தடுத்து நிறுத்தி

# மனித விழுமியம் பேணுக!

### தவறின் மீண்டும் ஒரு தலைகுனிவு தவிர்க்கமுடியாததாகிவிடும்

**சமீபகாலமாகத் தமிழர் மீது வெறுப்பைக் காட்டும் காட்டுமிராண்டித் தனமான பல சம்பவங்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் நடந்துள்ளன. இவ்வாறான அநாகரிக சம்பவங்கள் மேலும் நடவா திருக்கக் கூடிய கண்டிப்பான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். தவறின் 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனத்துவேஷ செயற்பாடுகளால் நாட்டுக்கு ஏற்பட்ட அபகீர்த்தியும் தலைக்குனிவும் மீண்டும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.**

பேருந்தில் ஏறப்போகும் போது இந்து மதகுரு கைது செய்யப்பட்டமை, புத்தளத்திலிருந்து கொழும் புக்கு வந்த தமிழர் இனவாத ரீதியில் அவதூறு செய்யப் பட்டமை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவன் புகை வண்டியில் வைத்துத் தாக்கப்பட்டு வெளியே தள்ளிவிடப் பட்டமை, மொறட்டுவவிலிருந்து கொழும்பு வந்த தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டமை, சட்டத்தரணி ஒருவர் இனவாத வார்த்தைகளால் தூஷிக்கப்பட்டுக் கத்தியால் குத்தப்பட்டமை, வெள்ளவத்தை காலி வீதியில் தமிழ் பத்திரிகை வாசித்துக் கொண்டு நின்ற வயோதிபரைத் தாக்கி விட்டு அவர் கையிலிருந்த தமிழ்ப் பத்திரிகையைக் கிழித்து எறிந்தமை போன்றவை கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சமீப காலத்தில் நடைபெற்ற அநாகரிகச் செயல்களில் சிலவாகும்.

கொழும்பில் நடைபெற்ற அநாகரிகச் செயல்களை அகில இலங்கை இந்துமாமன்றமும் சில தென்னிலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக அறிகிறோம்.

**"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய தரசு"**

என்பது பொய்யாமொழி. ஜனாதிபதி விரைந்து செயற் பட இறைவன் வழிகாட்டுவானாக.

### சிவவேடப் பொலிவழகு துதித்து வாழ்வாம்

இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்

நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்.

— காஞ்சிப்புராணம்

141635
141635

(வாகீசகர் குருபூசை: சித்திரைச் சதயம் (29-04-2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள் - (1):

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்

— பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் —

(புத்தகம் 110 இதழ் 11 இன் தொடர்ச்சி)

பண்டிதர் அவர்கள் தமது காலத்தையும், கருத்தையும், பொருளையும் சைவ சமய அபிவிருத்தியின் பொருட்டும், தமிழ்க் கல்வியின் பொருட்டும் செலவழித்தார் எனத் தமிழ் நாட்டார் கருதினர். இவருடைய தன்னலங் கருதாத தனிப்பெருந் தொண்டின் திறனை அக்காலத்தில் வெளிவந்த ஆரியஜனப்பிரியன் என்னும் பத்திரிகை, தலையங்கம் எழுதிப் பாராட்டிற்று.

''வண்ணைநகர் தன்னிலவ தரித்தே யிந்த
வையகத்தில் தமிழ்வழங்கு தேய மெல்லாம்
எண்ணில்புகழ் புண்ணியங்கள் இலங்க ஓங்கும்
எழில்கொள்சுவா மிநாதப்பண்டி தப்பேர் பூண்ட
தண்ணளிதா எம்பொறுமை தயவே யாதி
தக்கபெரு மணிகளன்றிக் கலன்கள் பேணா
அண்ணலே கற்பகநேர் வள்ளா வுன்றன்
அன்பதனை யென்றுமெமக் கருளு வாயே''

பண்டிதர் அவர்கள் அரிதின் முயன்று எழுதிப் பதித்த திருச்சிற்றம்பலக் கோவையார் உண்மை என்னும் நூலை வியந்து வித்துவசிரோமணி, பிரம்மஸ்ரீ ஏரம்பையர், சுன்னாகம் குமாரசாமிப்புலவர், பூவை கலியாணசுந்தர முதலியார் முதலானோர் சிறப்புப் பாயிரங்கள் வழங்கியுள்ளார்கள். வித்துவசிரோமணி சொன்னவற்றில் ஒரு பகுதி:

''பக்குவ முணர்ந்து நெக்குள முருக
வக்கு மாலையு மருட்டிரு நீறு
மிக்கன வென்று மேற்கொளு மன்பன்
றக்கநல் லறத்துறை தானறிந் தொழுகுவோன்
வண்ணைவாழ் சின்னத் தம்பிவேள் வியக்க
நண்ணிய தவப்பய னாகிநன் குதித்தோ
னிலக்கண விலக்கிய மியல்பெறக் கற்றோன்
புலக்குரி மாந்தர் நலக்குரி பண்பாற்
றம்பைய னென்றித் தலத்தோர் சாற்றும்
சுவாமி நாதனாந் தொல்பெயர்த் தோன்ற
லெழுதா வெழுத்தி னியைத்துவழு நீக்கி
வெளிப்படுத் தினனிம் மேதினி தனிலே''

மகாபாரதத்தின் ஆதிபருவத்துக்கு வித்துவசிரோமணி அவர்கள் நயந்ததும்ப எழுதிய உரையையும், திருவாதவூரடிகள் புராணம், நிகண்டு முதலிய நூல்களையும் பண்டிதர் அவர்கள் பிழையில்லாமற் பதித்தார். திருவாவடுதுறையாதீனத்துத் தம்பிரான் சுவாமிகள் ஏகபோகவுரிமையாகப் படித்துவந்த திராவிடமாபாடியத்தை அரிதின் முயன்று பெற்று முதலில் அச்சிட்டவரும் இவரேயாவர். நாவலர் அவர்களின் தருமபரிபாலகர், பஞ்சாயத்தாருக்குக் கணக்குக் காட்டுதல் வேண்டும் என்னும் கட்டுப்பாட்டை நிலவச் செய்தவரும் இவரேயாவர். பஞ்சாயத்தாரை நியமித்தவரும் இவரேயாவர்.

ஒரு சமயம் மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தார் பண்டிதர் அவர்களைக் கொண்டு சைவப்பிரசங்கம் செய்வித்தார்கள். மகாசந்நிதானம் அவர்கள் மனமுருகி, மகிழ்ந்து தாமணிந்திருந்த கௌரிசங்கரவுருத்திராக்க மாலையைக் கழற்றிப் பண்டிதர் அவர்களுக்கு அணிவித்தார்கள். பல்லாயிரவர் சமூகத்திலே பண்டிதர் அவர்கள் அதனைப் பல் பண்போடு ஏற்று, மறுநாள் விநயத்தோடு உருக்கமாகச் சில பாடல்களும் பாடி உருத்திராக்கத்தை மகாசந்நிதானம் அவர்களிடமே சேர்ப்பித்தார்கள்.

''ஆசிரியோன் றதனை வேட்டே
னவ்விடத் துற்ற மற்றைக்
காசகல் பொருள்க ளெல்லாங்
கதிதரு மடத்தி லென்றும்
வாசமா யுறுதல் வேட்டேன்
வழங்கிய கண்டி தன்னை
நேசமாய்ச் சபையி லேற்றே
னேரினின் மறுக்க லாற்றேன்.
அன்பினாற் செய்த சீரை
யவமதி செய்யா தேற்று
மன்பினான் மகிழ்ச்சி யுற்றேன்
மாண்டகு கண்டி தன்னை
யன்பினா லுன்பா லுய்த்தே
னேற்றருள் செய்வா யெந்தாய்
முன்பினால் பெற்ற தாக
முன்னியே வாழு கின்றேன்.''

இவ்வாறாக மடாதிபதிகள் பண்டிதர் அவர்களின் சைவப் பண்பாட்டையறிந்து மகிழ்ந்து பல பாடல்கள் யாத்துப் பதில் விடுத்தார்கள். அவற்றுள் ஒன்றையாவது படித்து மகிழ்வாம்.

''சிந்தைமகிழ்ந் திவண்விடுத்த பத்திமிகு
நிருபமது சேரப் பெற்றோ
மெந்தவகைப் பொருளளித்து நீயேற்கா
[illegible]யெனத் தெளிந்தே யிறைவன் சின்னந்
தந்திடினோ மறுக்காது மகிழ்ந்துகுருப்
[illegible]பிரசாதந் தாங்கு வாயென்
றந்தவகை[illegible]யளிக்கவதை யேற்றுப்பின்
னனுப்பியது மடையப் பெற்றோம்''

[15ஆம் பக்கம் பார்க்க]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாஸ்கந்த மூர்த்தி

சிவாலயங்களில் பல உருவத் திருமேனிகள் இருக்கும். அவை ஒவ்வொன்றும் உட்கருத்துக்கள் உடையதாகவும் புராணக் கதைகட்கு அமைய அமைக்கப்பட்டதாயும் இருக்கின்றது. சிவபெருமான் அடியவர்களுக்கு அருள் செய்யுமாறு அவர்கள் மனோபாவனைப் படியும், அவ்வருட் செய்கைக்கு ஏற்றதுமான திருவுருவங்களைச் கொள்ளுவர். அவ்வாறான இருபத்தைந்து மூர்த்தங்கள் சைவாகமங்களில கூறப்பட்டுள்ளன (இந்து சமயம் ஆண்டு 13 வினாவிடைப் பகுதியில் இவ்விருபத்தைந்து மூர்த்தங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன). இவைகளுள் சோமாஸ்கந்த மூர்த்தி முக்கிய மூர்த்தங்களுள் ஒன்று.

இம் மூர்த்தத்தில் சிவன் சுகாசனத்தில் உட்கார்ந்து இருக்க உமை இடப்பக்கத்தே காணப்படுவாள். அத்தன் நான்கு கைகளுடனும் அன்னை இரு கைகளுடனும் காட்சி தருவர். சிவனின் பின் வலக்கையில் மழுவும் பின் இடக்கையில் மானும் இருக்க முன் இடக்கை வரத முத்திரையிலும் (வரமருளும் குறியாக விரல்கள் பாதத்தை நோக்கிய வண்ணமுள்ள குறி) முன் வலக்கை (அஞ்சேல் என்று அபயமளிக்கும்) அபய முத்திரையிலும் காணப்படும். உமையின் வலக்கை மலர் தாங்க இடக்கை இருக்கை மீதிருக்கும். உமையம்மை சிவனை நோக்கியவாறு இருப்பாள். பெற்றோர்களுக்கு இடையில் பாலமுருகன் காட்சிதருவார்.

சோ + உமா + ஸ்கந்தர் = சோமாஸ்கந்தர். சோ = சிவன். அதாவது உமை, ஸ்கந்தனுடன் கூடிய திருவுரு சோமாஸ்கந்த வடிவம்.

இறைவன் சச்சிதானந்த மயமாக உள்ளவன் என்கிறோம். சத் என்றால் உண்மை - சிவம். சித் என்றால் அறிவு - சக்தி, ஆனந்தம் என்றால் இன்பம் - முருகன். ஆகவே சோமாஸ்கந்த மூர்த்தம் இறைவனின் சச்சிதானந்த இயல்பினைக் குறிப்பிடுவதாக தத்துவ ரீதியாகப் பொருள் கொள்ளலாம்

பாம்பன் குமர குருபரதாச சுவாமிகள் தமது 'திருவலங்கற் திரட்டு' என்ற நூலிலே,

''எங்கே அறிவோ அங்கே உண்மையும்
எங்கே உண்மையோ அங்கே அறிவும்
எங்கே இன்பமோ அங்கே அறிவும்
எங்கே அறிவோ அங்கே இன்பமும்
எங்கே இன்பமோ அங்கே உண்மையும்
எங்கே உண்மையோ அங்கே இன்பமும்
எங்கே சிவையோ அங்கே சிவமும்
எங்கே சிவமோ அங்கே சிவையும்
எங்கே சேயோ அங்கே சிவையும்
எங்கே சிவையோ அங்கே சேயும்
எங்கே சேயோ அங்கே சிவமும்
எங்கே சிவமோ அங்கே சேயும்
ஆமென்றறிவார் தாமே அறிஞர்''

என அருளியுள்ளது நோக்கத்தக்கது.

ஆகம விதிப்படி சோமாஸ்கந்த மூர்த்தத்தில் சிவனுக்கும் உமைக்குமிடையே முருகனைக் குழந்தையாகக் காட்டவேண்டும். முருகன் நின்ற நிலை, நடன நிலை, இருக்கை அல்லது அன்னையின் மடி மீது உட்கார்ந்த நிலை என்பவற்றில் ஏதாவது ஒரு நிலையில் இருக்கலாம். முருகனுக்கு ஒரு தலையும் இரு கரங்களும் தான் இருத்தல் வேண்டும் தலையில கரந்த மகுடம் இலங்க, காதுகளில் மகர குண்டலம் விளங்க, மார்பில் சன்னவீரம் என்ற அணிகலனை அணிந்திருத்தல் வேண்டும்.

நின்ற நிலையில் இருப்பின், ஒரு கையில் மலர் தாங்கி மறுகை ஹதயவலம்பித என்ற நடன முத்திரையுடன் இருத்தல் வேண்டும்; அல்லது இரு கைகளிலும் மலர் ஏந்தி இருக்கலாம்.

ஒரு விதிப்படி, முருகன் மேலாடை ஏதுமின்றி இடக்கை வரத முத்திரையிலும் வலக்கை புத்தகத்துடனும் இருக்கவேண்டும். நடன நிலையில் இருப்பின், வலக்கை சூசி முத்திரையிலும் இடக்கையில் பழம் வைத்துக்கொண்டும் இருத்தல் வேண்டும்.

காரண ஆகம விதிகளின்படி, சிவன் - முருகன்-உமை திருவுருவங்களுக்கு இருமருங்கும் நான்முகனும் திருமாலும் தத்தம் மனைவியருடன் இருத்தல் வேண்டும்.

---

**இந்த இதழில்........**

# எங்கும் திருநட்டம்

கடந்த மாதம் அநேக சிவாலயங்களில் பங்குனி உத்தரத்தை இறுதி நாளாகக் கொண்டு மகோற்சவங்கள் நடைபெற்றன. திருக்கோணேஸ்வரம் கோணநாதர், வண்ணை வைத்தீஸ்வரர், வல்வை வைத்தீஸ்வரர், நல்லூர் சட்டநாதர், கொழும்பு பொன்னம்பலவாணேசர், கண்டி செல்வ விநாயகர், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆகியன இவற்றுட் சில. இச்சிவாலயங்களில் எல்லாமே சோமாஸ்கந்த மூர்த்தியே தேருலா வரும் மூர்த்தியாக விருக்கிறார். சிதம்பரத்திலும் ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர்ச் சிவன் கோவிலிலும் மார்கழித் திருவாதிரைக்கு முதன் நாள் நடைபெறும் இரதோற்சவத்தில் இரத பவனி வருபவர் நடராஜப்பெருமான்.

சோமாஸ்கந்த மூர்த்தமும் நடராஜ மூர்த்தமும் தமிழ் மக்களால் வழிபடப்படும் சிவமூர்த்தங்கள். சிதம்பரத்தில் மார்கழித்திருவாதிரையின் போதும் ஆனி உத்தரத்தின் போதும் தேருலா வந்த நடராஜப் பெருமான் தேரிலிருந்து இறங்கி ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளி மறுநாள் விடியற்காலையில் திருமஞ்சனங் கொண்டபின் நண்பகலில் சிவகாமியம்மை காண ஆனந்த நடனக் காட்சி தந்த வண்ணம் சிற்றம்பலத்துக்கு எழுந்தருளும் தரிசனக் காட்சி மிகச்சிறப்பானது. திருவாரூர் தியாகேசர் பங்குனி உத்தர விழாவின் போது தேருலாவின் பின் தரும் அஜபா நடனக் காட்சி அற்புதமானது.

இந்நடனக் காட்சிகள் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களையுடையவை. அணு முதல் அண்டம் வரை யாவுமே ஓய்வு ஒழிச்சலின்றி இயக்கத்திலுள்ள உண்மையை சிவ நடனம் உணர்த்தி நிற்கிறது.

இங்கு இலங்கையில் பல கோவில்களிலும் தேருக்கு சுமாமி எழுந்தருளும் போதோ அல்லது தேரிலிருந்து சுவாமி இறங்கிய பின்னரோ சுவாமியை நடனமாட்டுவது வழமையாகி விட்டது. இவ்வாறு சுவாமியை நடனமாட்டுபவர்களும் அநேகமான ஆலய நிர்வாகிகளும் அர்ச்சகர்களும் கூட ஏன் நடனமாட்டுகிறோம் எவ்வாறு நடனமாட்டுதல் வேண்டும் என்பதை அறிந்திருப்பதில்லை.

இம்மாத இந்துசாதனம் சோமாஸ்கந்த மூர்த்தம் பற்றியும் தியாகேசரின் சிவநடனம் பற்றியும் பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகிறான். — ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசரும் தியாகராசரும்

திருவாரூரில் பிறந்தால் முத்தி - சிதம்பரம் (தில்லை) தரிசிக்க முத்தி. நாம் பிறக்கும் இடத்தை நம் விருப்பம் போல் அமைத்துக் கொள்ள முடியாது. ஆனால் எங்கே பிறந்தாலும் வாழ்நாளில் ஒரு முறை தானும் தில்லை சென்று கூத்தப் பெருமானைத் தரிசித்து உய்யலாம்.

திருவாரூர் தலத்துக்கும் திருத்தில்லைப் பெருங் கோவிலுக்கும் இடையே பல பொதுவான அம்சங்கள் உண்டு.

கண்களால் காண இயலாத இறைவனது அருவத் திருமேனிக்கும் கண்களால் காணக்கூடிய உருவத்திரு மேனிக்கும் மூலகாரணமாய்த் திகழ்வது அருவுருவ மாகிய சிவலிங்கத் திருமேனி.

**"காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்**
**நீணாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்"**

என்பது சேக்கிழார் கூற்று.

இவ்வாறு எல்லாம் வல்ல இறைவன் தன்னை அன்பினால் வழிபடும் அடியவர்கள் எல்லோருக்கும் அவரவர் நினைந்த உருவில் தோன்றி அருளும் எல்லாத் திருவுருவங்களுக்கும் மூலமாகத் திகழ்வது சிவலிங்கத் திருமேனி. அதனாலேயே ஒவ்வொரு திருக்கோவிலிலும் சிவலிங்கத் திருவுருவம் அமைந்த கருவறை மூலஸ்தானம் என வழங்கப்பெறுகிறது. மூலஸ்தானம் என்ற வடசொற்றொடர் தமிழ் ஒலி வழக்குக்கு ஏற்ப மூலட்டானம் எனத் திரிந்து திரு என்ற அடைமொழியும் சேர்ந்து திருமூலட்டானம் என வழங்கப் பெறுவதாயிற்று.

திருமுறை ஆசிரியர்களால் பரவிப் போற்றப் பெற்ற எல்லாத் திருத்தலங்களிலும் இறைவன் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருவுருவுடனேயே எழுந்தருளியிருக்கக் காண்கிறோம். ஆயினும் தில்லைவன மாகிய சிதம்பரத்திலும் திருவாரூரிலும் உள்ள சிவலிங்கம் பெருமான் சந்நிதிகள் இரண்டும் மட்டுமே திருமூலட்டானம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

**"பெரும்பற்றப்புலியூர் திருமூலட்டானத்தார்"**

எனவும்

**"திருவாரூரில் திருமூலட்டானத்தெஞ் செல்வன் தானே"**

எனவும் அப்பரடிகள் சிறப்பித்தும் போற்றியுள்ளமை இங்கு நோக்குதற்குரியது.

(குறிப்பு: மத்தியந்தன முனிவருடைய மகனான வியாக்கிரபாதர் (புலிக் கால் உடையவர்) தில்லை வனத்திற்கு வந்து சிவலிங்கப் பெருமானைத் தமது பெரும் பற்றாகக் கொண்டு வழிபாடு செய்தமை பற்றியே தில்லை வனமாகிய சிதம்பரத்திற்குப் பெரும் பற்றப்புலியூர் என்ற பெயர் ஏற்பட்டது)

சிவத்தலங்கள் எல்லாவற்றிலும் தாவரம் (நிலைத்த திருவுருவம்) ஆகச் சிவலிங்கமும் திருவீதிக்கு எழுந்தருளும் திருமேனியாகச் சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், சோமாஸ்கந்தர் முதலிய திருவுருவங்களும் வழிபடப் பட்டு வருவதைக் காண்கிறோம். இவ்வெழுந்தருளும் திருமேனிகள் அனைத்தும் தாவரம் என மேற்சொல்லப் பட்ட சிவலிங்கத் திருமேனியின் திருவுலாத் திருவுருவங் களாகவே அடங்குவன.

தில்லைச் சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள கூத்தப் பெருமான் திருமேனியும் திருவாரூர்த் திருக்கோவிலில் எழுந்தருளியுள்ள தியாகராசப் பெருமான் திருமேனியும் அங்குள்ள சிவலிங்கத் திருமேனியை ஒத்து மூலட்டான அமைப்பில் அமைந்தனவாகவே போற்றப்படுகிறது.

சைவசமயாசாரியர்கள் நால்வரும் திருமூலட்டானப் பெருமானைப் போற்றிப் பரவும் முறையில் தில்லைச் சிற்றம்பலப் பெருமான் முன்னே நின்று செந்தமிழ்ப் பனுவல்களால் பரவிப் போற்றியுள்ளார்கள்.

**"சிற்றம்பலமேய முற்றாவெண் திங்கள் முதல்வன் பாதமே**
**பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"**

எனத் திருஞானசம்பந்தரும்

**"தில்லைக்கு இறையைச் சிற்றம்பலத்துப்**
**பெருநட்டம் ஆடியை வானவர்**
**கோனென்று வாழ்த்துவனே"**

எனத் திருநாவுக்கரசரும்

**"புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப்**
**பெற்றாமன்றே"**

எனச் சுந்தரரும்

**"தென்பால் உகந்தாடும் தில்லைச்**
**சிற்றம்பலவன்"**

என மணிவாசகப் பெருமானும் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல் புரியும் அம்பலவாணர் திருவுருவத்தினையே சிறப்பாகப் பாடிப் போற்றியுள்ளமையைக் காணலாம்.

இவ்வாறே, திருவாரூரில் திருமூலட்டானத்தில் எழுந்தருளியுள்ள புற்றிடங் கொண்ட பெருமானைப் பரவிப் போற்றிய சுந்தரர்,

**"வீதி விடங்கப் பெருமான் முன்பு சென்று**
**தொழுது துதித்து வாழ்ந்து திருமாளிகை**
**வலம் வந்து போந்தார்"**

எனச் சேக்கிழார் பெருமான் கூறுவதாலும் அப்பரடிகள் அருளிய,

**"முத்துவிதானம் மணிப் பொற்கவரி"**

எனத் தொடங்கும் திருவாதிரைப் பதிகத்தில் வீதி விடங்கப் பெருமானாகிய தியாகராசப் பெருமான் அடியார் புடைசூழத் திருவீதிக்கு எழுந்தருளும் திருக் காட்சியைப் பரவிப் போற்றியிருப்பதாலும்

திருவாரூரில் திருமூலட்டானத்தில் எழுந்தருளிய புற்றிடங் கொண்ட பெருமான் எழுந்தருளிய திருமூலட் டானம் என்னும் சந்நிதியைப் போலவே தியாகராசப் பெருமான் எழுந்தருளிய சந்நிதியும் முதன்மையுடைய தாகப் போற்றப் பெற்று வந்தமை புலனாகிறது.

ஆகவே தில்லை, திருவாரூர் ஆகிய இவ்விரு தலங் களிலுமுள்ள சிறப்புடைய சந்நிதிகளாகவுள்ள இவற்றைக் குறிப்பிற் புலப்படுத்தும் வகையில் இங்குள்ள மூலத் தானமுடையார் சந்நிதி "பெரும்பற்றப் புலியூர்த் திரு மூலட்டானம்" எனவும் "திருவாரூர்த் திருமூலட் டானம்" எனவும் இனமுள்ள அடைமொழி கொடுத்து வழங்கப்பெறுவதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாடு ஆளாது ஆரூர் ஆளும் தியாகராஜா

''பிறக்கமுத்தி திருவாரூர்'' எனப் புகழப்படும் சிறப்புடைய மூலாதாரத்தலம் திருவாரூர். பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று. பிருதிவித் (மண்) தலம். 'திருவாரூர்த் தேரழகு' என்பது பிரசித்தமானது. எல்லாச் சிவாலயங்களின் சந்நிதித்தியமும் சாயரட்சை எனப்படும் திருவந்திக்காப்பு நேரத்தில் இத்தலத்தில் விளங்குவதாக ஐதிகம். சுந்தரர், திருத்தொண்டத் தொகையைப் பாடுவதற்கு அடியார்களின் பெருமைகளை விளக்கிய பெருமை இப் பதிக்கேயுரியது. பரவையார் அவதரித்த பதி. ''கமலை'' என்னும் கமலாம்பாள் தவம் செய்யும் அரியதலம்.

பிருதிவி (மண்) தலமான இங்கு சுயம்பாகக் கரையான் புற்றில் தோன்றியதால் புற்றிடங் கொண்டார் என அழைக்கப்படுகிறார்.

சிதம்பரத்தில் எவ்வாறு நடராஜப் பெருமான் சிறப்புப் பெறுகிறாரோ அவ்வாறே திருவாரூரில் புற்றிடங் கொண்டாருக்கு வலது பக்கத்தே கோவில் கொண்டிருக்கும் தியாகராஜர் சந்நிதி சிறப்புப் பெற்றது.

தேவலோகத்திலிருந்து தியாகராஜர் திருவாரூர் வந்ததே பல தியாகங்களின் விளைவு தான்.

திருமாலுக்கு ஒரு குறை. பிள்ளை இல்லாத குறை. அதனால் சிவனைக் குறித்து நெடுந்தவம் இயற்றினார். உமைபாகராக சிவன் காட்சி கொடுத்தார். சிவபெருமான் ''அழகு மிகுந்த ஆற்றல் மிக்க எல்லோரையும் ஆட்டிப் படைக்கும் அறிவாற்றல் வாய்ந்த பிள்ளை ஒன்று உனக்குக் கிடைக்கும். அவன் எல்லா உயிர்களையும் ஆளும் திறமை மிக்கவனாக விளங்குவான்''என்று வரங்கொடுத்தார்.

இதனைக் கண்ணுற்ற உமாதேவியார், தம்மைத் தவிர்த்து சிவனை மட்டும் வழிபட்ட திருமாலைப் பார்த்து ''திருமாலே! சிவன் அருளியபடி ஏழுலகும் ஆச்சரியப்படும்படியான அழகான ஆண் மகன் பிறப்பான். ஆனால் அப்பிள்ளை யாருடைய அருளால் பிறந்தானோ அவராலேயே (சிவனாலேயே) இறப்பான்'' என்று சாபமிட்டார்.

திருமால் தம் குற்றத்தை உணர்ந்து, சிவன், அம்பாள், ஸ்கந்தர் ஆகிய மூவரையும் ஒரே பீடத்தில் -சோமாஸ்கந்தராக - எழுந்தருளச் செய்து நெறிதவறாது வணங்கினார். தம் பிள்ளையைக் கொஞ்சுவாரைத் தாய்க்குப் பிடிப்பது இயற்கை தானே. இடபாரூரராக மீண்டும் பார்வதி - பரமேஸ்வரர் காட்சி கொடுத்தனர். இம்முறை திருமால் பார்வதி - பரமேஸ்வரர் இருவரையும் நெஞ்சார வாழ்த்தி வழிபட்டார். மகிழ்ந்த அம்பாள் தனது முன்னைய சாபத்துக்கு ஒரு விலக்கு அளித்தாள்: ''நீ மகனைப் பெற்றாலும் என் கணவரின் நெற்றிக் கண்ணில் வெந்து போவான். ஆயினும் அரூபமாக (உருவமின்றி) திரியும்படி பிழைத்து எழுவான்.'' என்பதே சாப விலக்கு. இப்படி எரிக்கப்பட்டு மீளவும் அரூபமாக எழுந்தவன் மன்மதன் என்பது கூறாமலே விளங்கும்.

திருமால், தியாகராஜராகிய சோமாஸ்கந்த மூர்த்தத்தைப் போற்றிப் புகழ்ந்து, கணமும் பிரியாது அம்மூர்த்தத்தைத் தனது மார்பிலணிந்து கொண்டு வழிபட்டு வருவாராயினர். (இது புராணக் கதையாயினும் ஆழ்ந்த தத்துவத்தை உள்ளடக்கியது).

இவ்வாறிருக்கும் போது, புத்திரனின்றி வாடிய இந்திரன் தனது கவலையைத் திருமாலிடம் சென்று கூறி வணங்கினான். இந்திரன் மீது இரங்கிய திருமால், ''இதோ என்மார்பகத்தில் அசைந்தாடும் பெருமானாக விளங்கும் தியாகராஜமூர்த்தியை உனக்குத் தருகிறேன். இவரை வழிபட்டு நான் மன்மதனைப் பிள்ளையாகப் பெற்றேன். நீயும் வழிபடு'' என்று கூறி, தியாகராச மூர்த்தியை இந்திரனிடம் கொடுத்தார்.

இந்திரன் தியாகராஜமூர்த்தியைப் பெற்றுக் கொண்டு, வழிபாடு செய்யும்முறைகளையும் கேட்டறிந்து கொண்டு, விதிப்படி தியாகராஜரை வழிபட்டு வரலானான். அவன் தியாகராஜர் திருவருளினால் ஜயந்தன் என்ற மகனைப் பெற்றுச் சந்தோஷமாக தியாகராஜரை முன்னிலும் பன்மடங்கு பக்தியுடன் பூசித்து வந்தான்.

இவ்வாறிருக்கையில் வலன் என்னுமோர் அசுரன் தேவலோகத்தை வென்று இந்திரனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான். இந்திரன் தேவகுருவாகிய வியாழ பகவானிடம் கலந்தாலோசித்தான். தேவகுரு ''வலனை உன்னால் வெல்ல முடியாது. திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆள்பவனும், மறைக்காடு என்னும் வேதாரணியத்தில் உள்ள மணவாளப் பெருமானுடைய திருவருளை முழுதும் பெற்றவனுமாகிய முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற நாமம் பூண்ட சோழப் பேரரசன் பூவுலகில் இருக்கிறான். அவனை அழைத்து வந்து அவன் உதவியுடன் வலனை வெல்வாய்'' என்று யோசனை கூறினார்.

(முசு என்றால் குரங்கு. முற்பிறப்பில் குரங்காயிருந்து இறைவன் - இறைவி மேல் வில்வம் தளிர் சிந்தியதன் பயனாகவே சோழ சக்கரவர்த்தியானதுடன் அவனது தவவலிமையால் தேவருக்குதவிய மானுடனாகும் பேறும் பெற்றான்).

இந்திரனது அழைப்பின் பேரில் தேவலோகம் சென்று வலனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த முசுகுந்தச் சக்கரவர்த்தி, தேவலோக விருந்தினனாகப் பலநாட் தங்கினான். அப்போது தியாகராஜரின் திருவருள் அழகு கண்டு வியந்தான். திருமாலின் மார்பில் தவழ்ந்து தேவேந்திரன் வழிபாட்டில் உகந்து நின்றவரிடம் உள்ளத்தைக் பறிகொடுத்தான் சோழ சக்கரவர்த்தி.

அமரர் பதி ஆளாது ஆரூர் பதி ஆள ஆசை கொண்ட தியாகரும் சோழன் மட்டுமே காணுமாறு காட்சியளித்தார் ''என்னைத் திருவாரூர் கொண்டு சென்று வழிபடுவாயாக'' என அருட்கட்டளையிட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்த விடங்கத் தலங்கள்

முசுகுந்தச் சோழன் இந்திரனிடம் ஏழு தியாகராஜர் திருவுருவங்களை வாங்கி வந்தான். (''அமரருலகாளாது ஆரூர் ஆளும் தியாகராஜா'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

ஏழு தியாகேசர்களையும் முசுகுந்தன் ஏழு திருப்பதிகளில் நிலைபெறச் செய்தான். விடங்கர்களை ஸ்தாபித்த ஏழு திருப்பதிகளையும் சப்த (சப்த = ஏழு) விடங்கத் தலங்கள் என அழைப்பர்.

**"சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காராயில் — பேரான
ஒத்ததிரு வாய்மூர் உகந்ததிருக் கோளிலி
சத்தவி டங்கத் தலம்"**

என்ற தொகைச் செய்யுளால் இதை அறியலாம்.

இவ்வேழு திருத்தலங்களுள் விஞ்சிய பெருமைக் குரியது திருவாரூர். இங்கு இவருக்கு **வீதிவிடங்கர்** என்று பெயர். வீதிவிடங்கரின் நடனம் **அஜபாநடனம்** எனப்படும். (''அஜபா நடனம்'' என்ற கட்டுரையைப் பார்க்க).

இரண்டாவது தியாகராசமூர்த்தியை முசுகுந்தன் திருநள்ளாறு என்ற சிவத்தலத்தில் ஸ்தாபித்தான். திருநள்ளாறு சனிபகவான் வணங்கி அருள் பெற்ற தலம் என்பது பிரசித்தம். இது காரைக்காலிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ளது. திருஞான சம்பந்தர் மதுரையில் சமணருடன் ஏற்பட்ட அனல் வாதில் வெல்ல, திருநள்ளாற்றிறைவர் மேல் தாம்பாடிய ''போக மார்த்த பூண்முலையாள்'' என்ற பதிகத்தைத் தேர்ந்தெடுத்தது பலருக்கும் தெரிந்திருக்கும். (தீயில் வேகாததால் இப்பதிகம் பச்சைப்பதிகம் எனவழைக்கப் படுகிறது,.)

நள்ளாறில் ஸ்தாபிக்கப்பட தியாகராஜர் **நகவிடங்கர்** என்று அழைக்கப்படுகிறார். இவரது நடனம் **உன்மத்த நடனம்**. உன்மத்தம் என்றால் பித்து (பயித்தியம்)' பைத்தியம் பிடித்தவன் போல முன்னும் பின்னும் மேலும் கீழுமாகக் குப்புறக் கவிழ்வதுபோல நடிக்கும் நடனம்.

மூன்றாவது மூர்த்தியை முசுகுந்தன் திருநாகைக் காரோணத்தில் ஸ்தாபித்தான். இத்தலம் இப்போது நாகபட்டினம் என அழைக்கப்படுகிறது. இங்குள்ள தியாகர் சுந்தர **விடங்கர்**. இவரது நடனம் **பாராவார தரங்க நடனம்**. (பாராவாரம் = கடல், தரங்கம் = (அலை). இந்நடனம் அலை சுருண்டு விழுவது போலத் தியாகரால் முன்பக்கம் கவிழ்ந்து கவிழ்ந்து ஆடப்படுவது.

நான்காவது மூர்த்தி ஸ்தாபிக்கப்பட்ட தலம் திருவாரூருக்குத் தெற்கில் பதின்மூன்று கிலோ மீற்றர் தொலைவில் திருக்காறாயில் உள்ளது. இங்குள்ள விடங்கர் **ஆதிவிடங்கர்** எனவழைக்கப்படுகிறார். இவரின் நடனம் குக்குடநடனம். (குக்குடம் = கோழி). கோழியைப் போல ஆடுவதால் குக்குட நடனம்.

ஐந்தாவது மூர்த்தி திருக்கோளிலியில் ஸ்தாபிக்கப் பட்டது. இத்தலம் இக்காலத்தில் திருக்குவளை என வழங்கப்படுகிறது. திருக்காறாயிலுக்குத் தென்கிழக்கே உள்ளது. திருக்கோளிலி என்றவுடன் நமக்குச் சுந்தரரின் ''நீள நினைந்தடியேன் ......'' என்று தொடங்கும் தேவாரம் நினைவுக்கு வரும். ஆம். குண்டையூர்க் கிழார் கொடுத்த நெல்லைத் திருவாரூருக்கு கொண்டு வர இறைவனின் உதவியைச் சுந்தரர் நாடியது இத்தலத்தில் தான். இங்கு தியாகர் **அவனி விடங்கர்** என்ற நாமத்துடன் அருள் பாலிக்கிறார். இவரது நடனம் **பிருங்கநடனம்**. (பிருங்கம் = வண்டு). மலர்ந்த பூவைக் கண்டதும் வண்டு மலரைச் சுற்றிச் சுற்றி வந்து மலரின் மீது இருப்பது போலச் சுழன்றும் நிலைக்கு வந்தும் நடிக்கும் நடனம்.

ஆறாவது மூர்த்தி திருவாய்மூரில் ஸ்தாபிக்கப் பட்டது. திருக்கோளிலியிலிருந்து தென்கிழக்கே நான்கு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது திருவாய்மூர். இதுவும் எமக்கு மிகவும் பரிச்சயமான சிவஸ்தலம். திருமறைக்காட்டிற்கு வந்த அப்பரடிகளின் கனவில் தோன்றி ''நாம் வாய்மூரில் இருப்போம் வா'' என அழைத்து ஆட்கொண்ட தலம். இங்குள்ள தியாகேசர் **நீலவிடங்கர்** எனப்படுகிறார். அவரது நடனம் **கமலநடனம்**. நீரில் பூத்திருக்கும் தாமரை (கமலம் = தாமரை) அந் நீரின் அசைவிற்கேற்ப அசைவது போல ஆடும் நடனம்.

ஏழாவது மூர்த்தி திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. வேதாரண்யத்திற்கும் யாழ்ப்பாணத்துக்கும் உள்ள உறவு மிக நெருக்கமானது. வேதாரண்யேஸ்வரர் ஆலய அறங்காவலர்களாக இன்றும் யாழ்ப்பாணம் கரணவாய் - வரணிச் சைவக்குரு பரம்பரையினரே இருந்து வருகின்றனர். மறைகளால் பூட்டப் பட்ட திருக்கதவைத் திறந்தும் பின்னர் அடைத்தும் அப்பரும் சம்பந்தரும் அற்புதம் நடத்திய திருத்தலம் வேதாரண்யம். இங்கு தியாகேசர் **புவனி விடங்கர்** என்ற திருநாமம் கொண்டு விளங்குகிறார். இவரது நடனம் **ஹம்ஸபாத நடனம்** (ஹம்ஸம் = அன்னம்) அன்னப் பறவை மெல்ல அடியெடுத்து நடக்கும் அழகுபோல் ஆடுவதால் ஹம்ஸபாத நடனம்.

மேலே குறித்த ஏழுவகை நடனங்களும் ஆழ்ந்த கருத்துக்கள் உடையன. இந்த நடனத்திற்கு ஏற்ற ஜதி முறைகளும் இருந்தன. சோழர் காலத்தில் சமய, விசேட, நிர்வாண தீட்சை பெற்ற சிவபூசையும் விரத நியமங்களும் உடையவர்கள் அவ்வத்தலங்களில் அத்தலத்துக் குரிய நடனத்துடன் தியாகப் பெருமானை தூக்கி நின் றாடி விழாக்கொண்டனர். இந்நடன முறைகள் இப்போ பெரிதும் அருகிவிட்டது கவலைக்குரியது.

**" திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன் தன் அடியார்க்குமடியேன் "**

—சுந்தரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜபா நடனம்

நடராஜர் போலவே தியாகராஜரும் நடனமூர்த்தி தான். ஆனால் அந்த நடனம் நமக்குத் தெரியாமல் இருக்க தியாகராஜரது பிம்பத்தில் முகம் தவிர்ந்த மிகுதி அங்கங்கள் அனைத்தும் எப்போதும் மறைக்கப் பட்டிருக்கும்.

நடராஜரின் நடனத்திற்கும் தியாகராஜரின் நடனத்திற்கும் வித்தியாசமுண்டு நடராஜர் தானாகவே இடது காலைத் தூக்கி ஆனந்த தாண்டவம் புரிகிறார். தியாகராஜர் தாமாகத் தாண்டவம் ஆடவில்லை. மகாவிஷ்ணுவின் இருதயத்தில் சிவன் இருக்கிறார். அதனால் மகாவிஷ்ணு சுவாசிக்கும்போது அவரது மார்புக்கூடு மேலும் கீழுமாக ஏறி இறங்கி அசையும்போதும் மார்பு முன்பு புடைத்தும் பிறகு வற்றியும் முன்னும் பின்னுமாக அசையும் போதும், தியாகராஜரில் ஏற்படும் அசைவுகளில் ஒரு நடனம் அமைந்து விடுகின்றது. இவ்வாறாக மகாவிஷ்ணுவின் இருதய கமலத்தில் அமையும் தியாகராஜரின் நடனம் அஜபா நடனம் எனப் படுகிறது.

ஜபமாக இல்லாதது 'அஜபா'. மற்றெல்லா மந்திரங்களையும் நாம் புத்தி பூர்வமாக அட்சரங்களைக் கொண்டு செபிக்கிறோம். அந்த மந்திர சப்தங்களின் அதிர்வினால் நாடியில் ஏற்படும் சலனங்களிலிருந்து அபூர்வமான தரிசனம், சக்தி, சித்தி மனத்தெளிவு ஆகியன உண்டாகின்றன. இவை பூரணமாக ஏற்படுவதற்கு, அந்த மந்திரங்களைப் பிராணாயாம பூர்வமாக - அதாவது தீர்க்கமாக மூச்சை இழுத்து அடக்கி வெளியிடுவதோடு சேர்த்து - பண்ண வேண்டும்.

மேற்கண்டவாறு மந்திரங்களைச் செபித்தல் இன்றியும் மூச்சை அளவாக ஒழுங்குபடுத்தி விடுதல் இன்றியும் சித்தத்தைச் சாந்தமாக வைத்துக்கொண்டால், உள் - வெளி மூச்சுகள் மிகவும் நீண்டுகொண்டே செல்லும்; மூச்சு அடங்கி இருக்கும் காலமும் அதிகரித்துக் கொண்டே போகும். பரம சாந்தம் உண்டாகும். இதற்குத்தான் அஜபா என்று பெயர். உபசாரமாக இதையும் ஒரு ஜபம் என்று கூறுவர்.

மகாவிஷ்ணு, குண்டலினிப் பாம்பை வெளியில் ஆதிசேடன் என்ற பாயணையாகக் காட்டிக் கொண்டு ''யோக நித்திரை'' கொள்வதைத்தான் திருமால் பள்ளி கொள்வதாகக் கூறுகிறோம். இந்த ''யோக நித்திரை''யின் போது மகாவிஷ்ணு அஜபா சாதனை பண்ணி பரமாத்மாவான சிவசொரூபத்தில் ஐக்கியப் பட்டிருப்பார். அப்போது மகாவிஷ்ணுவின் பிராண சஞ்சாரத்திற்கு ஏற்ப பரமேசுவரன் ஆடுவது தான் தியாகரின் அஜபா நடனம்.

இதை ஒரு பிம்பமாக - விஷ்ணுவின் இருதயத்திலே சிவன் நாட்டியமாடுவது போல் - காட்டினால், அதனைச் சாதாரண மக்கள் தப்பாக விளங்கிக் கொள்வர் என்ற காரணத்தாலேயே திருவாரூர் தியாகராசரின் பிம்பத்தில் எல்லாவற்றையும் நன்றாக மூடி, முகத்தை மாத்திரம் காட்டுகிறார்கள்.

திருவாரூர் கோவிலை எடுத்துக் கொண்டால் அக் கோவில் மகாவிஷ்ணுவின் சொரூபமாகவே கட்டப்பட்டுள்ளது அந்த சொரூபத்தில் இருதயம் எங்கே இருக்குமோ அங்கே தான் தியாகராஜரின் பூங்கோயில் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

செபிக்கப்படாமலே பிராணனோடு சேர்ந்து இயங்கும் இந்த அஜபா மந்திரத்தைத் திருமூலர் அசபை என்கிறார் (திருமந்திரம் நான்காம் திருமந்திரம்).

திருவாரூர் தவிர்ந்த ஏனைய ஆறு விடங்கத் தலங்களில் ஆடும் நடனங்கள் யோகியர்களுக்கு ஆறு ஆதாரங்களில் ஏற்படும் அசைவு, ஓசை இவற்றையே பெரிதும் ஒத்துள்ளதாகக் கூறப்படுகிறது. கடலோசை, வண்டோசை முதலியனவற்றை யோகியர் கேட்பர் என்பது திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆகவே விடங்கர் எனப்படும் தியாகேசர் யோகத்தோடு தொடர்புடையவராய் இருக்க வேண்டும். சிவ பரம்பொருள் உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயமாக்கி வீற்றிருந்து யோகசித்தியருளி வீடுபேறு தந்து சிறப்பிக்கும் வள்ளல் தன்மையால் தியாகேசர் எனப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்தப் பூமியை மனித உருவில் அமைந்ததாகக் கொண்டு திருவாரூர் மூலாதாரமாகவும், திருவானைக்கா சுவாதிஷ்டானம் (உந்தி) ஆகவும் திருவண்ணாமலை மணிபூரகமாகவும் திருக்காளத்தி அனாகதம் (கழுத்து) ஆகவும் காசி விசுத்தம் (புருவமத்தி) ஆகவும் சிதம்பரம் இருதய ஸ்தானம் (ஆஜ்ஞை) ஆகவும் சொல்லப்படும். மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தி எழுந்து தலையின் பின்புறமாக உள்ள ஆயிரம் இதழ்த்தாமரையிற் சென்று சேர்வதே யோகம் யோகநெறியில் தனிநின்ற நாயன்மார்கள் அமர்ந்திருக்கும் தேவாசிரிய மண்டபம் திருவாரூரில் அமைந்திருப்பது இத்தலத்தின் சிறப்புகளில் ஒன்று.

மூலாதாரத்தில் உள்ள ஆற்றலைத் தலையில் ஈசானிய திசைக்குக் கொண்டு போவதே யோகம் என்று திருமூலர் கூறுகிறார். அதற்கு ஏற்ப மூலாதாரத்தலமாகிய திருவாரூரில் தவக்கோலத்தில் கமலாம்பாள் ஈசானிய பார்வையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. கமலாம்பாள் ஒரு திருக்கரத்தில் உருத்திராட்ச மாலை ஏந்தி யோக நிலையில் காட்சி தருவதும் நோக்குதற்குரியது.

ஆறு ஆதாரங்களும் எண்ணிக்கையில் வேறுபட்ட இதழ்கள் கொண்ட தாமரை (கமலம்) களாக உருவகிக்கப்படுவது வழமை. அந்தத் தாமரைகளில் 'பராசக்தி வாசம் செய்வதாலேயே கமலாம்பாள் எனப் பெயர் பெறுகிறாள்.

மேற்கூறியவையும் வேறு பல ஆதாரங்களும் திருவாரூர் யோகநெறியின் அடிப்படையில் அமைந்த திருக்கோயில் என்பதைக் காட்டிநிற்கின்றன.

சிவமூர்த்தங்களுள் இல்லறத்தார் வழிபடற்குரிய சிறப்பு வாய்ந்தது சோமாஸ்கந்த மூர்த்தமாகும். குழந்தைப் பேறில்லாதார் தியாகேசப் பெருமானை வணங்கி அருள் பெறுவர். இல்லற மார்க்கத்தையும் யோக மார்க்கத்தையும் அரவணைத்து நிற்கும் அருமையான ஊர் ஆரூர் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

விக்கிரம ஸ்ரீ சித்திரை மீ 06 உ (18-04-2000)

# புத்தாண்டு சிந்தனைகள்

புத்தாண்டு பிறந்து விட்டது. புதுவருடப் பிறப்பு மக்கள் மனதில் எதிர்பார்ப்புகளோடு கூடிய நம்பிக்கையை ஏற்படுத்துவது வழமை. கடந்த காலங்களில் சந்தித்த துன்பங்கள் நீங்கி - நன்மைபெருகும் அருள் நெறி வந்தணைந்து - சாந்தி சமாதானத்தோடு கூடிய அமைதி வாழ்வு கிட்டுமென்ற நம்பிக்கையோடு மக்கள் விக்கிரம ஆண்டை வரவேற்கின்றனர். நாமும் அந்த நம்பிக்கையோடு புத்தாண்டை வரவேற்போம்.

நாட்டில் நடைபெறும் போர் நிறுத்தப்பட்டு அரசியல் பேச்சு வார்த்தைகள் மூலம், இனப்பிரச்சினைக்கு நீதியான நிரந்தரத் தீர்வு காணப்படுவதற்கு இதய சுத்தியுடனான முயற்சிகளைப் போரில் - நேரடியாகவும் மறைமுகமாகவும் - ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும். அதனையே பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் சமாதானத்தினால் சகஜ வாழ்க்கை நிலை ஏற்படச் சமயத் தலைவர்களின் பங்களிப்பு முக்கியமானது. இன்றைய நிலையில் சமயத்தலைவர்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்துள்ளது?

பிற சமயத் தலைவர்களுட் சிலர் சமாதானம் என்றுமே கானல் நீராக இருக்க - வெளிப்படையாகவே - பாடுபடுகிறார்கள்.

இன்னும் சிலர் சமாதானக் காற்று வீசும்போது (அல்லது வீசும் இடங்களில்) சமாதானம் சமாதானம் என்றும் போர் முரசு கொட்டும் போது (அல்லது கொட்டும் இடங்களில்) போராட்டம் போராட்டம் என்றும் சந்தர்ப்பவாதம் பேசிக்கொண்டு - ஒரு பக்கத்தில் போரை ஊக்குவித்துக் கொண்டும் மறுபக்கத்தில் சமாதானம் பேசிக் கொண்டும் - எதுவானாலும் அதில் தம்மை முன்னிலைப் படுத்திக் கொண்டு - இரட்டை வேடம் தாங்கிக் கொண்டு - தங்கருமத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். இவர்களது ஒவ்வொரு செயற்பாட்டிலும் மறைவானதோர் திட்டமிருப்பதை அவர்களது செயற்பாடுகளை மிக உன்னிப்பாகக் கவனிப்போர் மட்டுமே கண்டுகொள்வர்.

சைவ / இந்து சமயத்தவர்களைப் பொறுத்தளவில், வலுவுள்ள தலைமைத்துவமில்லாத வொரு நிலையே தொடர்கிறது. அதனால் சமாதான முயற்சிகளில் சைவ/இந்து சமயத்தவரின் ஒருமுகப்படுத்தப்பட்ட பங்களிப்பு என்று ஒன்று இல்லாத நிலையே காணப்படுகிறது. இந்நிலை மாறுதல் வேண்டும்.

இன்றைய நிலை என்ன?

சைவசமயத் தலைவர்கள் எனத்தம்மைப் பிறர் மதிக்கவேண்டுமென எதிர்பார்ப்பவர்களுக்குக் குறைவில்லை. அவ்வாறு தலைமைத்துவத்தை ஏற்று நடத்தக்கூடிய செல்வாக்கு உள்ளவர்கள் இல்லாமலுமில்லை. ஆனால் இவர்கள் தமது பேரும் புகழும் தேய்ந்து போய்விடக் கூடாது என்பதிற் கவனமாக இருந்து கொண்டு — (அவர்தம் வாழ்நாளுடன் அழிந்து போம்) தனிமனித வழிபாட்டை ஊக்குவித்துக்கொண்டு - எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக வாழும் வழியொன்றைக் கண்டு கொண்டு அவ்வழி சென்று கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சிலருக்கு சமய பரிபாலனம் என்பது சங்கக்கடை வியாபாரம் போற்படுகிறது.

வேறு சிலருக்கு கோவில் திருவிழாவுக்கு கோடி பொன் செலவழிப்பதுவும் கட்டடங்கள் கட்டுவதும் மட்டுமே சமயமாகத் தெரிகிறது.

இன்னுஞ் சிலருக்குப் பழமையை அப்படியே இறுகப் பற்றிக் கொண்டு நிற்பதுதான் சரியாகப் படுகிறது.

குருமார் எனப்படுபவர்களுட் பலருக்குத் தமது ஏகபோகம் தம்மை விட்டு நழுவிவிடாதிருக்க வேண்டுமென்பதும் தமது வருமானம் ஏறுமுகத்தில் இருக்கவேண்டுமென்பதுமே கொள்கை. சமயத்தின் வருங்காலத்தைப் பற்றி அக்கறையில்லை; அல்லது சிந்திக்க அவர்களுக்கு நேரமில்லை.

சமய தத்துவங்களையும் குறிக்கோள்களையும் அறிந்தவருட் பலர் சமூகத்தை இனித்திருத்தமுடியாது என முடிவு கட்டிவிட்டு ஒதுங்கியிருக்கின்றனர்.

இதன் விளைவு? ஆலயங்களிலும் தமது சொந்த வீடுகளிலும் நடைபெறும் சமய நிகழ்வுகள் தவிர்ந்த ஏனைய சமூக கலாசார அரசியல் விடயங்கள் அனைத்திலும் வழிகாட்டிகளாக, ஊக்குவிப்பாளர்களாகச் செயற்படும் தலைமைத்துவத்தை வேறு யாரிடமாயினும் கைகழுவிவிட்டு பிறரில் தங்கி வாழும் சமூகமாக தன்னம்பிக்கை அற்ற சமூகமாக எமது சமூகம் போய்க் கொண்டிருக்கிறது.

இதனால் எமது இளஞ் சந்ததியினர் எடுப்பார் கைப்பிள்ளையாக யார் யாரோ காட்டும் வழியில் — வெவ்வேறு திசைகளில் — சென்று கொண்டிருக்கிறார்கள்.

இதனிலிருந்து எவ்வாறு விடுபடுவது?

இதனிலிருந்து விடுபட ஒரே வழி ஒரு வலுவான தலைமைத்துவக் கட்டமைப்பை ஏற்படுத்த முயற்சிப்பதுதான். இந்தக் கட்டமைப்பு அதன் முதற் பணியாக சுயநலமற்ற — சமூகத்தின் சமய, சமூக, கலாசார, பொருளாதார முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட — சைவப் பிரசாரகர், குருமார்களைப் பயிற்றுவித்தல் வேண்டும். இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டவர்களிலிருந்து வலுவான தலைமைத்துவம் தானாகவே ஏற்படும்.

''இதுவரை காலமும் இப்படித்தானே நடந்து வந்தது. இனிமேலும் ஏதோ ஒரு வகையில் நடக்கும் தானே'' என்று தட்டிக்கழிக்கும் வார்த்தை பேசுபவர்க்கு வள்ளுவரின் பின்வரும் அடிகள் சமர்ப்பணம்: ''செய்தக்க செய்யாமை யானும் கெடும்'' புத்தாயிரமாண்டில் எமது சமூகம் செழிப்புற வேண்டுமாயின் செய்தக்கதொன்று உண்டு.

இதற்கு விக்கிரம வருடம் வழி சமைக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரைச் சதயம் (29-04-2000) அப்பர் குருபூசை

# அப்பர் நோக்கில் புழு

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அப்பர் சுவாமிகள் தமது தேவாரப் பதிகங்களில் மன்னுயிரைத் தன்னுயிராகப் பாவித்து எமக்கு உபதேசித்தவை பல. ஐந்தாம் திருமுறையில் அமைந்த பொதுத் தனித் திருக்குறுந்தொகையில் உள்ளவொரு தேவாரத்தில் புழுவுக்கு நான்கு பெருங்குணங்கள் அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டி அந்த நான்கு குணங்களும் இல்லாத யான் சிவனடியார் கூட்டத்தைச் சென்று சேர எத்தகைய பக்குவமுடையேன் என்று ஏங்குகிறார்;

புழுவுக்கும் குணம் நான்கு எனக்கும் அதே
புழுவுக்கு இங்கு எனக்கு உள்ள பொல்லாங்கு
இல்லை
புழுவினும் கடையேன் புனிதன் தமர்
குழுவுக்கு எவ்விடத்தேன் சென்று கூடவே.

இதன் பொருள்: சிவபெருமானே! புழுவினுக்கு, அதனது உடலுக்கு உறுதி கொடுக்க வல்ல, நான்கு நல்ல குணங்கள் உண்டு. அந்த நான்கு குணங்கள் எனக்கும் உண்டு. (புழுவானது, தனக்கு உரிய குணங்களைக் கொண்டு வினைகளைப் பெருக்கிப், பாவங்களை ஈட்டுவதில்லை. நானோ அவ்வாறில்லை. இம்மாயா காரியமாகிய உலகத்தில், ஆறறிவு உடைமையால் உடலோடு உயிரையும் ஓம்பும் காரியங்களில் ஈடுபட வேண்டிய யான், அவ்வாறு இந்நான்கு குணங்களையும் உபயோகித்து உயிரைப் பாதுகாக்காது வினைகளைப் பெருக்குவதால்) எனக்கு ஏற்படுகின்ற குற்றங்கள் போன்ற பொல்லாங்குகள் புழுவுக்கு ஏற்படுவதில்லை, எனவே நான் புழுவை விடக் கீழ்ப்பட்டவன். (இவ்வாறாக) தேவரீருடைய அடியார்களாகிய சிவனடியார் திருக் கூட்டத்தைப் போய்ச் சேருவதற்கு, எத்தகைய பரிபக்குவத்தை உடையவனாவேன்?

அப்பர் சுவாமிகள் குறிப்பிடும் புழுவின் நான்கு குணங்கள் பின்வருமாறு:

1. ஒன்றைப்பற்றி ஒன்றைவிடல்
2. நோக்கியதையே நோக்கல்
3. விருப்பு வெறுப்பு இன்றி அனுபவித்தல்
4. இடையறா முயற்சி.

### ஒன்றைப் பற்றி ஒன்றை விடல்

புழுவானது தனது உடலை வளர்த்தற்காக வலிமை மிக்கவொன்றைப் (பற்றுக்கோடொன்றைப்) பற்றி பின்னர் தான் முன்னர் பற்றியிருந்ததை விட்டுவிடும்.

ஆறறிவு உடைய யான் உயிரை ஓம்ப வேண்டியவன். (உயிரை ஓம்புதற்காக உடலை ஓம்புபவன்). அவ்வாறு உயிரை ஓம்புதற்கு என்றும் நிரந்தரமான பேரின்பத்தைத் தருகின்ற - என்றும் அழிவற்ற - இறைவனது திருவடிகளைப் பற்றுக்கோடாகப் பற்றிக்கொண்டு உலக மாயாகாரியப் பொருட்களிலுள்ள பற்றுக்களிலிருந்து விடுபடவேண்டிய யான், அவ்வாறு செய்யாமையால் புழுவினும் கீழ்ப்பட்டவன்.

### நோக்கியதையே நோக்கல்:

பாகற் கொடியிலுள்ள புழு தனது உடம்பை வளர்த்தற் பொருட்டு துவர்ப்பு மிக்க பாகற்காயையே சாப்பிடும். அதற்குப் பக்கத்தே கரும்பை வைப்பினும் அக்கரும்பு தனக்குரியதல்ல என விடுத்து, தனக்குப் பழக்கப்பட்ட பாகற்காயையே சாப்பிடும்.

நானுமோ பல பிறவிகளிலும் பழகிய பழக்க தோஷத்தால், மாயா காரியப் பொருட்களிலிருந்து கிடைக்கும் சிற்றின்ப வயப்பட்டு, அச்சேற்றில் இறுமாந்து இருக்கிறேன். அவ்வாறிருக்கும் எனக்கு கருணை மிக்க இறைவன், கைமாறு கருதாது, என்து பக்குவமுணர்ந்து சிவாநுபவமாகிய கரும்பைத் தருகின்றானாயினும், நான் அதன் சுவையை - அருமையை - அறியாது, பழக்க தோஷத்தால் அதனை வெறுத்து தொடர்ந்தும் உலக இன்பச் சேற்றில் மூழ்கிக் கிடக்கின்றேன். நோக்கியதையே நோக்குகிறேன்.

ஆறறிவு பெற்ற நான் குறைந்த அறிவு பெற்ற புழுப் போல நடந்து கொள்வதால், நான் புழுவினும் கீழானவன்.

### விருப்பு வெறுப்பின்றி அனுபவித்தல்:

புழுவானது தனக்கு - அதனது பிராரத்துவ கன்மத்தின் விளைவாக - வரையறை செய்யப்பட்ட போகத்தை விருப்பு வெறுப்பின்றி அனுபவித்து தனது உடம்பை ஓம்பும் காரியத்தில் ஈடுபடுகின்றது.

ஆனால் ஆறறிவுடைய யானோ, எனது பிராரத்துவ வினைக்கீடாகப் பெற்றுக்கொண்ட உடம்பை வைத்துக்கொண்டு, விருப்பு வெறுப்புக்கொண்டு - ஆணவத் திமிர்கொண்டு அலைந்து - உயிரை ஓம்பும் காரியத்தில் ஈடுபடாதிருக்கிறேன். ஆகவே நான் புழுவினும் கடையன்.

### இடையறா முயற்சி:

புழுவானது தனது உடம்பை ஓம்புதற்காக, உணவு கருதி, பகலிலும் இரவிலும் ஓயாது முயன்று போகம் துய்த்து இன்பமடையும் குணத்தை உடையது.

ஆறறிவு படைத்த யானோ, உயிரை ஓம்புதற் பொருட்டு மிகவும் அரிதினில் முயன்று அடைய வேண்டிய - உயிருக்கு உறுதி பயக்கும் - இறைவனது திருவடிகளாகிய பேரின்பத்தை முயன்று பெற்றுப் பேரின்புறாது, உலக இன்பத்தை முயன்று அடைய எண்ணி, வருந்தி உழலுகிறேன். ஆகவே நான் புழுவினும் கீழானவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பதஞ்சலி மாமுனிவர்

நடராஜப் பெருமானை நினைக்கும் போது அவரது நடனத்தைப் பார்த்த வண்ணம் உள்ள சிவகாமியம் மனும் வேறு இருவரும் நினைவுக்கு வருவர். நடராஜர் விக்கிரகமானாலும் சரி சித்திரமானாலும் சரி, எதிலும் அவருக்கு இரண்டு பக்கலிலும் இந்த இரண்டு பேரும் இருப்பார்கள். ஒருவருக்கு இடுப்புக்குக் கீழே பாதியு டம்பு பாம்பாக இருக்கும். இன்னொருவருக்கு இடுப்புக் குக் கீழே பாதியுடம்பு புலியாக இருக்கும். அந்த இரு வரும் - எவருக்கும் எதுவித இடையூறும் செய்யாமல் - நடராசப் பெருமானின் திருநடனத்திலேயே முழுநேரத் தையும் காலத்தையும் மனதையும் அர்ப்பணம் பண் ணியபடி - திருக்கூத்தைத் தரிசித்தபடி - இருப்பார்கள். புலிக்கால் காரர் வியாக்கிரபாதர் எனப்படுவார். வ்யாக்ர என்றால் புலி என்று பொருள். பாம்புக்கால்காரர் பதஞ்சலி எனப்படுவார். வியாக்கிரபாதரது வரலாறு இம்மலரில் பிறிதோர் கட்டுரையில் (பாற்கடல் ஈந்த பிரான்) தரப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் பதஞ்சலி யாரைப் பற்றிச் சிந்தனை செய்வோம்

பதஞ்சலி ஆதிசேடனின் அவதாரமென்று கூறப்படுகி றது. ஆதிசேடனோ மகாவிஷ்ணுவின் இணை பிரியாத பக்தர். திருப்பாற்கடலில் பகவானுக்குப்படுக்கையாக இருப்பவர். விஷ்ணுவின் பரம பக்தர் எவ்வாறு பரம சைவராகி நடராஜப் பெருமானின் இணைபிரியாத பக் தரானார்? திருப்பாற்கடலிலிருப்பவர் ஏன் சிதம்பரம் வந்தார்?

மகாவிஷ்ணுவேதான் ஆதிசேடனை சிதம்பரத்துக்கு அனுப்பிவைத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அவ் வாறாயின் மகாவிஷ்ணுவுக்கும் நடராஜருக்கும் என்ன சம்பந்தம்?

இந்த சம்பந்தம் மிக நெருங்கிய சம்பந்தம்; மனப் பூர்வமான சம்பந்தம்; நடராஜர் மஹா விஷ்ணுவின் இருதயத் தாமரையிலே நடனம் செய்வது தான் அந்தச் சம்பந்தம்! அந்த நடனம் - அஜபா நடனம் - பற்றி இவ் விதழிலேயே இன்னோரிடத்தில் (அஜபா நடனம் என்ற கட்டுரையைப் பார்க்கவும்) விபரிக்கப்பட்டுள்ளது.

இந்த அஜபா நடனம் தான் ஆதிசேடனைப் பதஞ் சலி ஆக்கிற்று. இதோ கதையைக் கேளுங்கள்:

ஒரு நாள் மாலை வேளை மகாவிஷ்ணு சிவத்தி யானம் பண்ணி சிவதாண்டவத்தைப் பார்த்து இரசித் துக் கொண்டிருந்தார். தமது இருதய கமலத்தில் பிர சன்னமாயிருக்கும் நடன மூர்த்தியின் தரிசனத்தைப் பெற் றதில் அவருக்குத் தாங்க முடியாத சந்தோஷம் ஏற் பட்டது. அதைக் கண்ணுற்ற ஆதிசேடன் ''என்ன இவ்வளவு சந்தோஷம்?'' எனக் கேட்டாராம். அதற்கு விஷ்ணு ''என் இருதயத்திலே பரமேஸ்வரன் நர்த்தனம் பண்ணினார், அதைத் தரிசித்த சந்தோஷம்'' என்றா ராம். உடனே சிவதாண்டவத்தை தாமும் தரிசிக்க வேண்டுமென ஆதிசேடன் கேட்டார்.

இவ்வாறானதொரு வினாவையே மகாவிஷ்ணுவும் எதிர்பார்த்திருந்தார். மூடி மறைத்துக் கொள்ளாமல் நன்றாகத் தாண்டவமாடுவதாக வெளியில் தெரிகிற நட ராஜ மூர்த்தியிடம் ஆதிசேடனை அனுப்பி அவரு டைய பக்தி விசேடத்தினால் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு மேலும் கீர்த்தி ஏற்படச் செய்து, எல்லா மக்களும் வந்து கண்ணாரத் தரிசனம் செய்து தரிசனத்தினாலேயே முத்தி பெறச் செய்ய வேண்டுமென்பது மகாவிஷ்ணுவின் விருப்பம். ஆகவே மகாவிஷ்ணு ஆதிசேடனிடம் ''தென்பாரத தேசத்திலே தில்லை வனத்தில் சிதம் பர க்ஷேத்திரம் இருக்கிறது அங்கே சிவன் நடராஜா வாக ஆனந்த தாண்டவம் செய்கிறார் போய் தரிசனம் பண்ணிக்கொள்'' என்று சொல்லி அனுப்பினார்.

ஆதிசேடன் பதஞ்சலி மகரிஷியாக அவதாரம் செய்து சிதம்பரம் சென்றார். (இதனால் மகாவிஷ்ணு வுக்கு பாம்புப்படுக்கை இல்லாமலாகிவிட்டது என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. ஆதிசேடன் மகாவிஷ்ணு வுக்கு பாம்பணையாக இருந்துகொண்டே தம்முடைய அம்ச கலைகளினால் பூமியில் ஒரு அவதார ரூபம் எடுத்தார் என்பதுவே சரியான விளக்கம்).

அதிரி மகரிஷியின் மகனாக பதஞ்சலி அவதரித் தார். அதனால் ஆத்ரேயர் என்றும் அவருக்குப் பெயர்.

கோணிகாபுத்ரர் என்றும் அவருக்கு ஒரு பெயர். சில புராணங்களில் கோணிகா என்ற பெண் முனிவ ருக்குப் புத்திரனாகப் பிறந்தாரெனக் கூறப்பட்டு அத னாலேயே 'பதஞ்சலி' என்ற பெயர் ஏற்பட்டதாகக் காரணம் சொல்லப்படுகின்றது.

கோணிகா அஞ்சலி முத்திரை (வணக்கத்தைக் குறிக்கும் நடன முத்திரை) யுடன் கூடிய வகையில் அர்க்கியநீரை (தேவர்களுக்கும் விருந்தினர்க்கும் வணக்கத்துடன் தீர்த்தத்தால் செய்யும் உபசாரம் அர்க் கியம் எனப்படும்) வைத்துக்கொண்டு சூரியபகவானிடம் தனக்கு மகாத்மாவான மகனை அருளுமாறு வேண்டிக் கொண்டிருந்தாள். அப்போது ஆகாசத்திலிருந்து ஆதி சேடன் அந்த அஞ்சலி ஹஸ்தத்தில் (கூப்பிய கையில்) விழுந்து அவதாரம் எடுத்தார். 'பத்' என்றால் 'விழு வது, என்று பொருள். அஞ்சலித்த கரங்களில் விழுந்த மையால் பத் + அஞ்சலி = பதஞ்சலி என மாதா பெயரிட்டாள் என்று 'பதஞ்சலி விஜயம்' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது

சரகர் என்றும் அவருக்கு ஒரு பெயர். ஆதிசேடனின் ஆசை பரிபூரணமாக நிறைவேறிற்று. சிதம்பரத்திலேயே வாசம் செய்து கொண்டு நடராஜரை எக்காலமும் தரிசனம் செய்துகொண்டு அவருடைய முக்கிய இரு பக்தர்களுள் ஒருவரானார். (அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாற்கடல் ஈந்த பிரான்

மத்தியந்தன முனிவர் என்பவர், தாம் தவம் செய்து பெற்ற மகனுக்கு சிறந்த கல்விப் பயிற்சி அளித்தார். தந்தையிடம் அறிவுநூற் பயிற்சி பெற்ற அம் மைந்தன் சிறப்புடைய திருத்தலம் ஒன்றையடைந்து இறைவனை வழிபட விரும்பினார். மத்தியந்தன முனிவர் மகனைத் தில்லைப்பதிக்கு செல்லுமாறு யோசனை கூறினார். தந்தை சொல் தவறாத மைந்தன், தில்லை வனத்தை அடைந்து அங்கு ஒரு அழகிய தடாகமும் அதன் தென்பால் ஆலமரமொன்றின் நிழலில் சிவலிங்கத் திருவுருவமும் இருக்கக்கண்டு மகிழ்ந்தார். அங்கு ஒரு தவச்சாலை அமைத்து சிவலிங்கப்பெருமானைப் பூசித்து வருவாராயினார்.

''பொழுது விடிந்தபின் கொய்யும் மலர்கள் வண்டு மொய்த்தனவாகி விடுகின்றன. சூரியோதயத்தின் முன் பூப்பறிப்பதானாலோ இருட்டில் வழி தெரியவில்லை, மரங்களில் ஏறினால் பனியால் கால் வழுக்குகின்றது. பூசைக்கு உகந்த மலர் கொய்ய முடியாமலிருக்கிறதே'' என இளைய முனிவர் மனம் வருந்தினார்.

சிவபெருமான் அவருக்குக் காட்சி தந்தார். அவ் விளைய முனிவர் இறைவனை வணங்கி, வாழ்த்தி, ''ஐயனே! தேவரீரை வழிபடுதற் பொருட்டு அடியேன் மலர் பறிப்பதற்கு விடியற் பொழுதில் சென்று மரங் களில் வழுக்காமல் ஏறத்தக்கதாக என்னுடைய கை கால்கள் புலியின் வலிய நகங்களையுடையனவாதல் வேண்டும். வழி தெரிந்து செல்வதற்கும் பழுதற்ற நறு மலர்களைத் தெரிந்து கொய்வதற்கும் கால்களிலும் கை களிலும் கண்கள் உண்டாதல் வேண்டும்'' எனக் குறை யிரந்து வேண்டினார். இறைவனும் வேண்டிய வரத் தைக் கொடுத்தார்.

வரம்பெற்ற அவ்விளைய முனிவர் வியாக்கிரபாதர் (புலிக்கால் முனிவர்) என்னும் காரணப் பெயர் பெற்று, சிவனைத் தான் விரும்பிய வண்ணம் புதுமலரிட்டு முட்டாது இறைஞ்சி வருவாராயினர். இவ்வாறு புலிக்கால் முனிவர் வழிபட்ட காரணத்தால், தில்லை வனம் புலியூர் என வழங்கப் பெறுவதாயிற்று. வியாக் கிரபாத முனிவர் உலகியல் பற்றுக்களை அறவே நீக்கி இறைவனை மட்டுமே பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்ந்தமையால் புலியூர் எனும் பதி பெரும்பற்றப்புலியூர் எனச் சிறப்புடைய மொழியுடன் திருநாவுக்கரசு நாயனாரால் போற்றப்படும் சிறப்புடையதாயிற்று.

இவ்வாறு தில்லைப் பெருமானை வியாக்கிரபாதர் வழிபட்டிருக்கும் நாளில் அவரது தந்தையாரான மத்தியந்தன முனிவர் தில்லைக்கு வந்தார். தந்தையின் விருப் பப்படி வியாக்கிரபாதர் வசிட்டமுனிவரின் தங்கை யாரை மணம் செய்தார். வியாக்கிரபாதரும் மனைவி யாரும் செய்த தவப்பயனால் அவர்களுக்கு உபமன்யு என்ற குழந்தை பிறந்தது. அக்குழந்தையை வசிட்ட முனிவரின் மனைவியாராகிய அருந்ததி அம்மையார் எடுத்துச் சென்று தம்மிடமிருந்த காமதேனு என்னும் தெய்வப் பசு பொழிந்த பாலை ஊட்டி வளர்த்து வந்தார்.

பின்னர், வியாக்கிரபாதரும் அவர் மனைவியாரும் தம் குழந்தையைத் தம்மோடு வைத்துக் கொள்ள விரும் பிக் குழந்தையைத் தில்லைக்கு அழைத்து வந்தனர். இனிய உணவும் தீம்பாலும் ஊட்டினர். காமதேனுவின் இனிய பாலை அருந்தி வளர்ந்த உபமன்யு அவ்வு ணவை உண்ணாது உமிழ்ந்து விட்டுப் பசி தாங்காது அழுதது.

குழந்தை அழுவதைக் கண்டு வருந்திய வியாக்கிர பாதரும் அவர் மனைவியும் திருமூலட்டானப் பெருமான் முன்பு குழந்தையைக் கொண்டு வந்து கிடத்தினர்.

எல்லாம் வல்ல பரம்பொருள், அக்குழந்தைக்குத் தெய்வத் தன்மை வாய்ந்த பாற்கடலையே வரவ ழைத்து உணவாக ஊட்டினார். உபமன்யு என்ற அக் குழந்தை பாற்கடலைப் பருகிக் களித்தது.

இந்த அருட்செயலையே

**''பாலனுக்காய் அன்று பாற்கடலீந்து''**

என்று நான்காம் திருமுறையில் அப்பர் சுவாமிகளும்

**''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்**
**பாற்கடலீந்த பிரான் ..''**

என்று திருப்பல்லாண்டு பாடிய சேந்தனாரும் போற்றிப் பாடினர்.

# தெரிந்து கொள்ளுங்கள்

**அகக்கண்** — மனக்கண், ஞானக்கண்

**அகச்சமயங்கள்** — சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம்.

**அகப்பகை** — காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், பொறாமை (மாச்சரியம்)

**அட்டமங்கலம்** — கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி (அங்குசம்), முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல்.

**அட்டலட்சுமி** — ஆதிலட்சுமி, தான்யலட்சுமி, தைரிய லட்சுமி, கஜலட்சுமி, சந்தானலட்சுமி, விஜய லட்சுமி, வித்யாலட்சுமி, தனலட்சுமி.

**அறுபடைவீடு** — திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (திருத்தணி), பழமுதிர்சோலை (சோலை மலை).

**ஆறுமுகம்** — பிரணவம், இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, ஆதிசத்தி, பராசத்தி.

**ஆறு வைதிக மதங்கள்** — சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம்

**பதினொரு இருடிகள்** — அத்திரி, வசிட்டர், புலத்தியர், கிருது, பரத்வாசர், விசுவாமித்திரர், பிரசேதசர், இருசிகர், அகத்தியர், ததீசி, துருவாசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாடு ஆளாது ஆரூர் ஆளும் தியாகராஜா

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

முசுகுந்தன் திருவாரூர் திரும்ப இந்திரனிடம் விடை கேட்டான். முசுகுந்தன் செய்த பேருதவிக்குக் கைமாறாக அவன் கேட்கும் தேவலோகப் பரிசொன்று தர விரும்புவதாக இந்திரன் கூறினான். முசுகுந்தன் ''சோழ நாட்டில் இல்லாத அருமையான பொருள் ஒன்றும் இங்கில்லை. ஆதலால் தேவரீர் வழிபடும் தியாகராஜரைத் தந்தாற் போதும். நான் சோழநாட்டுத் தலைநகரிலே எழுந்தருளச் செய்து சிவாகம விதிப்படி பூசை நடைபெற ஏற்பாடு செய்வேன்'' என்றான்.

போர் உதவிக்குக் கைமாறு விரும்பாத முசுகுந்தன் தியாகரை வேண்டிக் கொள்ள நேர்ந்ததும் தியாகரின் திருவிளையாடலே ஆயிற்று. தியாகராஜமூர்த்தி திருமாலினால் தரப்பட்டதாகையின் அவரைக் கேட்டுத் தருவதாக ஒரு சாக்குக் கூறினான் இந்திரன். திருமாலோ தியாகரைத் திருவாரூர் மன்னனுக்குத் தியாகம் செய்து விடக் கூறிவிட்டார். தனது விருப்புக்கு மாறான திருமாலின் தீர்ப்பைக் கேட்ட தேவேந்திரன் மாயம் செய்தான்.

தியாகரைப் போலவே ஆறு உருவம் செய்தான் - ஏழில் எது வேண்டுமோ அதை எடுக்கச் சொன்னான். அதிலாவது உண்மைத் தியாகர் தங்கிவிட மாட்டாரா என்று கருதினான். ஆனால் தியாகரின் திருவுள்ளம் வழிகாட்ட முசுகுந்தன் உண்மைத் தியாகரையே அடையாளம் கண்டு எடுத்துக் கொண்டான்.

திகைத்துப் போன தேவேந்திரன் ஏழு விடங்கர்களையும் முசுகுந்தனுக்கே வழங்கி விட்டான். (விடங்கர் என்பதற்கு உளியால் செதுக்கப்படாதவர், ஆண்மையுடையவர், அழகர் என்று பொருள்), இவ்வாறு சோழநாட்டுக்கு கொண்டு வரப்பட்ட ஏழு விடங்கர்களையும் சோழநாட்டுத் திருக்கோவில்களில் ஸ்தாபித்தார் முசுகுந்தச் சக்கரவர்த்தி. மூலமான தியாகராஜரை திருவாரூரிலும் மற்றைய ஆறு விடங்கர்களையும் திருவாரூரைச் சுற்றியுள்ள ஆறு சிவத்தலங்களிலும் ஸ்தாபித்தார். இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட ஏழு ஸ்தலங்களும் சப்த விடங்க ஸ்தலங்கள் (சப்த = ஏழு) என அழைக்கப்படலாயின. (சப்த விடங்கத் தலங்கள் என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

புற்றிடங்கொண்டார் கோவிலில் அவருக்கு வடபக்கமாகத் தியாகரைக் கொணர்ந்து வைத்தார் முசுகுந்தன். அவ்வாறு செய்த நாள் மாசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தியும் அத்த நட்சத்திரமும் கூடிய தினமாகும். அன்று முதல் பங்குனி உத்தரம் வரை 27 தினங்கள் பெருவிழா எடுத்தான்.

அப்பெருவிழா இன்றும் சிறப்பாக நடைபெறுகிறது. இதுவே அங்கு நடைபெறும் பெருவிழா. மாசிமாதத்து அத்த நட்சத்திரத்தன்று கொடியேற்றி பங்குனி உத்தரத்தில் தீர்த்தம் தருவார் தியாகேஸ்வரர். முதல் நாள் சந்திரசேகரப் பட்டம் என்ற பெயரில் பெருவிழா. தேர் ஊர்ந்த தியாகர் அஜபா நடனமாடுவார். பங்குனி உத்தர விழா முடிந்து நடன கோலத்தில் (அஜபா நடனம் கட்டுரை பார்க்க) தியாகராஜர் பக்த காட்சி மண்டபத்துக்கு எழுந்தருளும் காட்சி அற்புதமானது.

திருவாரூர் தியாகராஜர் சந்நிதியில் இரத்தின சிம்மாசனத்தில் செல்வத் தியாகர் முன்னே இருவாட்படை விளங்க நடுவில் பூச்செண்டு பொருந்த எழுந்தருளிக் காட்சி தருகிறார்.

தியாகராசாவின் பக்கத்திலுள்ள அம்மை ''கொண்டி'' எனப்படுவள். தியாகேசர் சந்நிதியின் வலப்பால் ஒரு பீடத்திலுள்ள பெட்டகத்தில் வீதிவிடங்கராகிய மரகத சிவலிங்க மூர்த்தி உள்ளார். இவருக்குத்தான் நாள்தோறும் காலை மாலை வேளைகளில் அபிஷேகம்.

தியாகராசரின் முகம் மட்டுமே தெரியும். மார்கழி திருவாதிரையன்று தியாகராசரின் இடப்பாதத்தையும், பங்குனி உத்தரத்தன்று வலப்பாதத்தையும் கண்டு தரிசிக்க வேண்டும். மற்றைய அங்கங்கள் மூடி வைக்கப்பட்டிருக்கும் - அவை மிக இரகசியமானவை. (''அஜபா நடனம்'' என்ற கட்டுரையைப் பார்க்க).

போர் உதவிக்காகத் தியாகம் கருதிப் போனான் முசுகுந்தன். குறையிரந்த இந்திரனுக்குத் தியாகமாகத் திருமால் அளித்ததைத் சோழனுக்கு இந்திரன் தியாகமாகக் கொடுத்தான். தன்னையே உயிர்களுக்குத் தியாகமாக அருளும் தியாகத்தால் தம்மைப் பூலோகம் எடுத்துச் செல்லும்படி செய்த இவர் தியாகராஜர் தானே.

---

### 112 வது அகவையைப் பூர்த்தி செய்யும்

## சைவ பரிபாலன சபை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை இம் மாதம் நூற்றிப்பன்னிரண்டு அகவையைப் பூர்த்தி செய்கிறது.

இச்சபை சர்வதாரி வருடம் சித்திரைத் திங்கள் பதினான்காம் நாள் (29-04-1888) ஞாயிற்றுக்கிழமை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ''யாழ்ப்பாணம் சைவசமய பரிபாலன சபை'' என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் விகிர்தி வருடம் கார்த்திகைத் திங்கள் முதலாம் நாள் (15-11-1890) ''யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை'' எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சபையின் தோற்றமும் வளர்ச்சியும், குறிக்கோள்களும் நோக்கங்களும், ஆற்றிய பணிகள் பற்றிய விபரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தொடர் கட்டுரையொன்று அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் தொகுப்பு

### ★ சைவ வித்தியா விருத்திச் சங்கம்

சைவ வித்தியா விருத்திச் சங்கம் தனது பவள விழாவை மார்ச் 11,12 ஆம் திகதிகளில் திருநெல்வேலியில் கொண்டாடியது. இச்சங்கம் 1923—1960 காலப் பகுதியில் இலங்கை வாழ் சைவ மக்களின் கல்வி அபிவிருத்திக்கு ஆற்றிய பணிகள் மகத்தானவை. இச்சங்கத்தின் பணிகளுக்கு அச்சாணியாக விளங்கியவர். இந்து போட் இராசரத்தினம் அவர்கள். பவளவிழாவின்போது அன்னாரின் சிலை திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தில் திறந்து வைக்கப்பட்டது.

### ★ சைவப்புலவர் சங்கப் பட்டமளிப்பு விழா:

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பட்டமளிப்பு விழா 23-04-2000 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோர்களுக்குப் பட்ட மளிப்பு நடைபெறும். தேர்வுகளில் சித்தியடைந்தவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவுக்கு முன் சமய தீட்சை வழங்கப்படும்.

### ★ திருநாவுக்கரசுநாயனார் குருபூசை

சைவப் பாடசாலைகள், ஆலயங்கள், திருமடங்களில் அப்பர் சுவாமிகள் குருபூசை சித்திரைச் சதயத்தன்று (29-04-2000 சனிக்கிழமை) நடைபெறும். அன்று முற்பகல் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் குருபூசை வழிபாட்டில் புராண படனம், பண்ணிசை, சாற்றொழிவுகள் இடம் பெறும்.

### ★ சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகள்:

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் ஏப்ரல் 28, 29, 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது. இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கு 81 பேரும் சைவப்புலவர் தேர்வுக்கு 42 பேரும் தோற்றவுள்ளனர்.

### ★ வண்ணை நாவலர் மகாவித்தியாலய நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவு விழா

யூன் 23, 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

### ★ சித்தாந்த தமிழ் வகுப்புகள்:

சனிக்கிழமைகளில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சைவப்புலவர் சங்கத்தினரால் இலவச சித்தாந்த, தமிழ் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### ★ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளது 19வது ஆண்டு குருபூசை:

ஸ்வாமிகள் சமாதியடைந்த பங்குனித் திருவாதிரை தினத்தன்று (10-04-2000) நல்லை ஆதீனத்தில் பத்தி பூர்வமாக அனுட்டிக்கப்பட்டது. முற்பகலில் குரு மூர்த்தத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாத சுவாமிக்கு விசேட வழிபாடுகளும் சங்காபிஷேகம், மதிய வேளையில் திருமுறை அர்ச்சனை, கோ பூசை மகேஸ்வர பூசை ஆகியனவும் நடைபெற்றன. பிற்பகலில் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கும் புராண படனமும் இடம் பெற்றன.

### ★ சைவபரிபாலனசபையின் பட்டமளிப்பு பரிசளிப்பு விழா

1999 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சைவசித்தாந்த, பால பண்டித பரீட்சைகளில் சித்திபெற்றோருக்கு பட்டமளிப்பும் 1999 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வுகளிலும். ஆண்டு 12, 13 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட இந்து சமய, இந்து நாகரிக தேர்வுகளிலும் சித்தியடைந்தோருக்கு பரிசளிப்பும் 26-03-2000 ஆம் திகதி சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

★ இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் அவர்களின் சதாபிஷேகம் 19-03-2000 ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இயல்புத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் முழுமை பெற்ற தேசிகர் அவர்கள் மேலும் பல ஆண்டுகள் உடல் நலத்துடன் வாழ்ந்து அறிவாராய்ச்சித் தமிழ்ப்பணிக்குத் தொண்டு செய்ய வேண்டுமென இந்துசாதனம் பிரார்த்திக்கிறான்.

# இந்து சமயம் - ஆண்டு 13 வினாக்கள்

1. ஆகமம் என்பதன் பொருள் யாது?
2. புருஷார்த்தம் என்றால் என்ன?
3. சிலாசங்கிரகணம் என ஆகமங்கள் கூறுவது எதனை?
4. ஆகமங்களில் கூறப்பட்டுள்ள சிவமூர்த்தங்கள் எத்தனை? அவை எவை?
5. வைஷ்ணவர்களுள் வடகலையார், தென்கலையார் என அழைக்கப்படுபவர்கள் யாவர்?
6. காளிதாசர் செய்த முருகனைப் பற்றிய காவியம் எது?
7. விஷ்ணு கோவில்களில் விஷ்வக்சேனர் என்ற நாமத்துடன் வழிபடப்படுபவர் யார்?
8. சிரவணம் என்றால் என்ன?
9. மகாபாரதக் கதை யார் யாருக்குக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது?
10. பிரபத்தி என்றால் என்ன?
11. பிரபத்தி மார்க்கத்தின் இலட்சணங்கள் எவை?
12. சீவன் முத்தர் எனப்படுவோர் யாவர்?
13. சிவாயநம என்ற மகாமந்திரத்தின் எழுத்துக்கள் ஐந்தையும் நடராஜ மூர்த்தத்தின் எந்தெந்த அங்கங்கள் குறிக்கின்றன?
14. சிவனைத் நர்த்தனராஜன் என அழைப்பது ஏன்?
15. சாமம் என்பது எந்தத் தெய்வத்துக்குரிய பாராயண நூல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம்

## ஆண்டு - 13 விடைகள்

1. ஆன்மாக்கள் மனமாசு, மலமாசு நீங்கப்பெற்று மேலான வீடு பேற்றை அடைவதற்கு வழிசெய்வது எனப் பொருள்படும்.

2. மக்களால் விரும்பப்படுவன எனப் பொருள்படும். அவை தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என வழங்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமாகும்.

3. கருங்கல்லைத் தட்டியவுடன் அதிலிருந்து உண்டாகும் ஒலியைக் கொண்டு அக்கல்லின் தன்மையைக் கூறலாம் என்பது சிலாசங்கிரகணம். மணியோசை போன்ற நாதம் உடையது ஆண்கல். தாளத்தின் ஒலி தருவது பெண்கல். நாதமற்றது அலி. இவ்வாறு வேறுபாடறிந்து ஆண்திருவுரு, பெண்திருவுரு, பீடம் என்பவற்றை அமைத்தல் வேண்டும் என ஆகமம் கூறுகிறது. கல்லில் ரேகை, பிந்து, களங்கம் முதலிய தோஷங்கள் சிலசமயம் இருக்குமெனவும் ஆகமம் கூறுகிறது.

4, இருபத்தைந்து. அவை:
சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூரர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர்.

5. வடமொழியிலுள்ள வேத சாஸ்திரங்களுக்கு ஏற்றங்கொடுப்பவர்கள் வடகலையார் எனப்படுவர். தமிழ் மொழியிலுள்ள ஆழ்வாராதியரின் அருட் பாடல்களுக்கு ஏற்றம் கொடுப்போர் தென்கலையார் எனப்படுவர்.

6. குமாரசம்பவம்

7. விநாயகர்

8. புராணங்களைக் கேட்டல் சிரவணம் எனப்படும்.

9. வியாசபகவான் வைசம்பாயனருக்குக் கூறுவதாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது.

10. இறையன்பிலே உயர்ந்த நிலையை பிரபத்தி என்பர். அது முற்றிலும் இறைவனைச் சரணடைதல். அது ஏற்றத் தாழ்வின்றி எல்லோருக்கும் உரியது.

11. அ) இறைவனுக்கு விருப்பமானவற்றையே விழைதல்.

ஆ) இறைவனுக்கு விருப்பமல்லாதனவற்றை நீக்குதல்.

இ) அவன் தன்னைக் காத்தருள் புரிவான் என்ற நம்பிக்கை தளராதிருத்தல்.

ஈ) அவன் காவலை வேண்டி நிற்றல், இறைவனது பணிக்குத் தன்னை அர்ப்பணித்தல்.

உ) நான் ஒன்றுமில்லை என்று நினைத்தல்.

12. சைவசமய தத்துவ முறையில் முன்னேறிப் பெருநிலையில் வாழும் ஞானிகளைச் சீவன்முத்தர் என அழைக்கிறோம். இவர்களைப் பந்த பாசங்கள் தாக்குவதில்லை. அவர்களுக்கு துக்க, மகிழ்ச்சி நிகழ்ச்சிகள் கிடையாது. அவர்கள் திருவருள் ஒளியினாலும் தியானத்தாலும் தூய்மையடையப் பெற்றவர்கள்.

13. இம்மந்திர அமைப்பை முறையே துடி, வீசுகரம், அபயகரம், அக்கினி, ஊன்றிய திருவடி என்பன குறிக்கின்றன.

14. சிவன் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தவர் என்பதைக் குறிக்கிறது.

15. சிவபெருமானுக்குரிய பாராயண நூல்.

## அரசு வெளியிடும் சைவசமயப் பாடப் புத்தகங்கள்

அரசு வெளியிடும் சைவசமயப் பாடப் புத்தகங்களில் பிழையான விபரங்கள் கொடுக்கப்படுவது, சைவ மரபு- சைவப் பண்பாட்டிற்கு அந்நியமான விடயங்கள் புகுத்தப்படுவது, சைவமரபு - பண்பாட்டுக்கு அமையாத படங்கள் வெளியிடப்படுவது போன்ற பல்வேறு குறைபாடுகள் அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ள போதிலும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் இது பற்றிக் கவனம் செலுத்தாதிருப்பது கவலையளிக்கிறது.

சமீபத்தில் வெளியான சைவநெறி தரம் 2 புத்தகத்தில் சைவமரபை மீறிய பல விடயங்கள் இடம்பெற்றுள்ளது.

பாட நூல்கள் எழுத்தாளர் குழுவினால் எழுதி முடிக்கப்பட்ட பின் அவற்றை அச்சிடுமுன் அத்துறையில் புலமை மிக்க குழுவொன்றினால் தட்டச்சுப் பிரதியும் படங்களும் பரிசீலிக்கப்படுமானால் இவ்வாறான தவறுகள் ஏற்படாது தடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

*அடங்கன் முறை*

தேவார முதலிகள் பாடியருளிய திருமுறைகள் ஏழையும் மூவர் பாடல்கள் என்றும், மொழிக்குமொரு தித்தித் தினிக்கும் கரும்பு என்றும், முக்கனிகள் என்றும் கற்றறிந் தாரேயன்றி மற்றையோரும் மகிழ்ந்து போற்றுவர். தேவாரத் திருமுறை ஏடுகள் ஒரு காலத்தில் கிடைக்கப் பெறாதவைகளாயிருந்தன என்பதோடு, அவை பிழைகள் மலிந்தும் எழுதப் பெற்றிருந்த காலம் ஒன்று நிலவியது. மந்திரங்கள் போன்ற மகிமை வாய்ந்த தேவாரத் திரு முறைகள் பிழைபடப் பாடப்பெற்றமை கேட்டு வருந்திய பண்டிதர் அவர்கள், தமிழ்நாடெங்கும் திரிந்து, முப்ப துக்கும் அதிகமான ஏடுகள் தேடி எடுத்துத் தக்கவர் சிலரை உசாத்துணைவராகக் கூட்டி ஆராய்ந்து, ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் அதிகமான பிழைகளைத் திருத்தி அடங்கன்முறை எனப்பெயரிட்டுத் தலவரிசை தவறாமல் நல்லதொரு முகவுரையுடன் பதிப்பித்தார்கள்.

அந்தப் பதிப்பைக் கையிலெடுத்த சேதுசமஸ்தானப் பெரும்புலவர், செந்தமிழ்ச் சிங்கம், தலைசிறந்த வைஷ்ணவப் பெரியார் திரு. ரா. ராகவையங்கார் அவர்கள் ''தங்கள் அரிய பெரிய தேவாரப்பதிப்பு'' என்றும், ''தங்கள் அச்சுப்பதிப்புகள் எல்லா நெறியாலும் வனப்பு மிக்குள்ளன'' என்றும் எழுதிப் பாராட்டினார்.

இத்தகைய புகழ்மாலைகளை எல்லாம் கேட்டறிந்த குருநாதராய் வித்துவசிரோமணி அன்பு மீதூரப் பண்டிதர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், ''செல்வச் சிரஞ்சீவி தம்பையா. நீ சற்குணன், என்மீது பேரன்புடையவன்'' என்றெல்லாம் எழுதி. ''நல்லூர்க் கந்தராய என்குலதெய்வம் உனக்கு மேன்மேலும் ஆக்கந் தருவார்'' என்று வாழ்த்தினார்.

குருபக்தி மிக்குடைய பண்டிதர் அவர்கள் தம் ஆசிரியராய உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் அவர்கள் நோயுற்று வாடிய போது, போதியளவு உதவி செய்து அவரைக் காப்பாற்றினார். அவரும் நன்றி மறவாச் சிந்தையோடு மாணாக்கனாய இவரைப் புகழ்ந்து பாடிய பாடல்களில் ஒருசில திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பதிப்பித்த தனிப் பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள், ஆத்தர்கள் சிகாமணி, நயிட்டிகப் பிரமச்சரியத்தகைமைக்கொரு கட்டளை, அனைவரும் மதித்த சின்னத்தம்பி ஈட்டிய நல்லரிய தவ வித்தூறு முளை, சிந்தாந்தசாகரம், நம்பினோர்ஆறி எப்பொழுதினும் ஒதுங்கிடும் வடநாகு, அளவிலாச்சுகுண மேரு, சிலபகல் கற்பித்த எம்மனோர்க் குற்றகளை கண், எண்குணத் நைம்முகன் சமயமெய்ப் பத்திமைக்கு என்றென்றும் ஒருவரம்பு, ஏத்திய விசேட தீட்சாநிலை, அர்ச்சனை விடாவிரத சற்பாத்திரம், கருணைவெள்ளம் என்றெல்லாம் புகழ்வர். இன்னும் பண்டிதன் சுவாமிநாத தயாநிதி, நல்லார் தொழும் பண்டிதன் சாமிநாதநரேசன், வற்றாஅருட் பண்டிதன் என்பர். இன்னும் தாம் மூப்பினில் நோய்வாய்ப்பட்டு வருந்திய போது இவர் செய்த உதவியை மறவாது போற்றுவர்.

**''யாரும் புரப்பவர் இன்மையின் மூப்பினில் யான்பிணியும்**
**ஈருங்கொடிய மிடியும் அடவுள் இணைபொழுதில்**
**சாரும் புகழ்ப்பண்டிதன் சாமிநாத தயாநிதியைக்**
**கூருஞ்சுடரயில வேலோன் திருவருள் கூட்டியதே''**

இவ்வாறாகக் குப்பிழான் காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள் அதிகபொருட் செலவுசெய்து அச்சேற்றிய அத்தனை நூல்களையும் விலைகொடுத்து வாங்கி எல்லோருக்கும் இலவசமாக விநியோகித்தவர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ்ச் சுடர்மணியாய் விளங்கிவந்தமையை வாழ்த்தியவர். இவர்மீது பெருமதிப்புக்கொண்ட பண்டிதமணியவர்கள், இவர் 1934 ஆம் ஆண்டில் மறைந்தபோது 340 அடி நீளமுள்ள கையறுநிலை பாடியுருகினார். ''இந்துமுகத்தான் சமயம் என்படுமோ என்படுமோ செந்தமிழும் என்படுமோதேர்.'' என்பது பண்டிதமணி அவர்களின் ஆற்றாமை.

உ

## சைவசமயப் பெருநாள்கள்

### (சித்திரைப் பூரணை முதல் வைகாசிப் பூரணை வரை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சித்திரை | 06 | உ | (18-04-2000) | செவ்வாய் | சித்திரா பூரணை, சித்திரைச் சித்திரை சித்திர குப்த விரதம் |
| | 10 | உ | (22-04-2000) | சனி | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 15 | உ | (27-04-2000) | வியாழன் | நடேசரபிஷேகம் |
| | 17 | உ | (29-04-2000) | சனி | திருநாவுக்கரசு நாயனார் குருபூசை |
| | 19 | உ | (01-05-2000) | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 21 | உ | (03-05-2000) | புதன் | அமாவாசை விரதம் |
| | 22 | உ | (04-05-2000) | வியாழன் | சித்திரைப் பரணி |
| | 23 | உ | (05-05-2000) | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| | 25 | உ | (07-05-2000) | ஞாயிறு | சதுர்த்தி விரதம், அக்கினி நாளாரம்பம் |
| | 27 | உ | (09-05-2000) | செவ்வாய் | ஷஷ்டி விரதம் |
| வைகாசி | 01 | உ | (14-05-2000) | ஞாயிறு | வைகாசி மாதப்பிறப்பு |
| | 02 | உ | (15-05-2000) | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 04 | உ | (17-05-2000) | புதன் | பூரணை, வைகாசி விசாகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Preachers and the Priests

Many of those people who embrace a new faith do not do so after examining the philosophy of that faith. Intellectuals might have evaluated the concepts before accepting them. But the common people do not look at the concepts and ideals.

If the common people accept a faith or the philosophy contained in it, they must be able to explain the concepts of the philosophy when asked. They must be able to adduce reasons for holding their religious principles being better than those of others. But in reality, a majority of the followers of a religion, would not be able to expound the philosophical aspects of that religion. It is a fact that majority of the Saivaitees do not know anything about Saiva Siththantha.

No religion flourishes because of its philosophy. Ordinary people are not worried about philosophy. If they find a great saint who is full of compassion and is known to follow good habits they believe him. They follow his faith in the firm belief that whatever he says must be good On the contrary, though a religion is replete with divine philosophy, the moment the preachers and priests of that religion is found to have deviated from the prescribed code of conduct that religion begins to decline. It is not possible to find the direct reason for people joining religions based on contrary philosophies. But we can find the reason for the decline of religions which people used to be proud of for its greatness. If we can find how a religion declined, we can understand how it grew and flourished.

If we look into the causes for the decline of any religion in any country, we will find that there have been irregularities in its institutions and misconduct on the part of those who preached it We are not concerned with those religions that attract people through violence and / or money. If a religion offers baptism after rendering all kinds of social service people are apt to be attracted by it. It is said one particular religion grew in times of famine and war. It is also said that when another religion was spread by compulsion people in large numbers had to embrace it. Here it is proved that people do not embrace a religion because of its philosophy. We must also note another thing. Christian missionaries converted many people by saying to them. " You have been suppressed in your religion. We will uplift you if you come to our religion. We will offer you education, medical care and other things free ". Even then not all of them embraced that religion. Thousands, though they felt oppressed by their own religion, did not think much of the facilities offered by any other religionists and refrained from joining it. Of course their own goodness was a reason for their decision Another reason is that they kept on clinging to their own religion with the conviction that they want to remain in a religion in which great saints have been born during every generation.

Religions which do not use compulsion or money power have flourished due to the qualities of the priests and the preachers. It is not enough for representatives of a faith to have only outward appearance To whichever religion he / she belongs he should not be selfish There should be no hatred. There should be moral discipline, good tapes and peace and compassion Their exceptional qualities should help to remove the shortcomings of those who follow their faith Therefore to make our religion flourish we must see that high quality preachers arise in our midst. We need them not to counter anything. We need representatives who exemplify our religious principles by their lives. Our religion has been alive from time immemorial because of teachers who exemplified our religious principles by their lives In the future also it will flourish because of such great people.

If someone tries to convert people through wars we cannot do anything. We are also not wealthier enough to counter those who spend millions for proselytizing people. Even if we have enough money, our work in converting others would not be genuine. It will not last. Because, whatever we do with wealth and power may be lost when someone else comes with more wealth and power. Hence, what we should do is better ourselves with faith in our soul-force, without depending on external forces Then our religion would flourish without any propaganda, force or attraction.

Many intellectuals in other countries praise Saiva Siththantha because of its great ideals. Some of them come to our religion after a good deal of research and self-enquiry. But this will not be applicable to the common people. For our religion to flourish among the common people, we must train our priests and produce preachers with high ideals and qualities.

The Hindu Organ, during the last twelve months has been strongly advocating the establishment of a Training College for priests and preachers. It has also been advocating the establishment of The Conference of Saiva Institutions and to appoint a paid officer as its Secretary General to attend to all matters relating to the proposed Training College and for coordinating all social welfare activities among the Saivaitees in Sri Lanka. Let us work together during the year Vickrama to achieve this goal.

Edited & Published by Professor R Kumaravadivel on behalf of the Jaffna Saiva Paripalana Sabai of 450, K. K S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K S. Road, Jaffna. 18-04-2000 (Fullmoon Day).

Digitized by Noolaham Foundation.